04.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மக்காச்சோளத்தில் தண்டுத் துளைப்பான்



**பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்:** இப்பூச்சி பெரியகுளம் தாலுகா, குள்ளப்புரம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, கெங்குவார்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், தமிழ்நாட்டில் மக்காச்சோளம் பயிரிடக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் இப்பூச்சி பெருத்த சேதத்தை ஏற்படுத்துகிறது. இப்பூச்சியின் புழுக்கள் 15-20 நாட்கள் வயதுள்ள இளம் நாற்றுகளிலிருந்து, பயிர் முதிர்ச்சி அடையும் வரை பயிரை தாக்கக் கூடியது. முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம் புழுக்கள் ஆரம்பத்தில் இலைகளிலுள்ள பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். பின்னர் அவை தண்டைத் துளைத்து, உட்சென்று குருத்துப் பாகத்தைத் தாக்கி, திசுக்களை உண்டு சேதத்தை விளைவிக்கின்றன. புழுக்கள் இளம் பயிரைத் தாக்கும் போது, குருத்தழிவு அறிகுறி தோன்றும். வளர்ந்த செடிகள் தாக்கப்படும் போது புதிதாக வெளிவருவதும் இலை விரியும் போது, நடுநரம்பின் இருபுறமும் சமதூரத்தில் துளைகள் காணப்படும். மக்காச்சோளத்தை தவிர கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற பயிர்களையும் இந்தப்பூச்சி பீடை தாக்கக்கூடியது.

**பூச்சியின் வாழ்க்கைச் சரிதம்**: பெண் அந்துப்பூச்சி இலைகளின் அடிப்பரப்பில், நடுநரம்பை அடுத்து முட்டைகளை குவியல்களாக இடும். ஒரு பூச்சி 200-300 முட்டைகள் இடக்கூடும். அவை செதிள்களைப் போல் தட்டையாகவும், கோள வடிவிலும் இருக்கும். முட்டைகளிலிருந்து சுமார் 7 நாட்களில் வெளிவரும் இளம் புழுக்கள் தண்டைத் துளைத்துக் கொண்டு உட்செல்லும். அவை 25-30 நாட்களில் முழு வளர்ச்சியடையும். வளர்ந்த புழுக்கள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்திலும், பழுப்புநிறத் தலையைக் கொண்டு இருக்கும். அவற்றின் உடலில் கருமைநிறப் புள்ளிகள் காணப்படும். அவை தண்டில் துவாரம் உண்டாக்கி, அதை மெல்லிய பட்டு போன்ற இழையால் மூடி பின்னர் தண்டின் உள்ளேயே கூண்டுப்புழுவாக 7-10 நாட்களில் அந்துப்பூச்சியாக வெளிவரும். அந்துப்பூச்சிகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படும்.

**பூச்சிக்கட்டுப்பாடு**: குருத்து காய்ந்த செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி அழித்து விட வேண்டும். விளக்குப்பொறி வைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். தோட்டங்களில் களைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். டிரைக்கோகிராம்மா மற்றும் டெலினாமஸ் இனங்களைச் சேர்ந்த முட்டை ஒட்டுண்ணிகள் முட்டைகளைத் தாக்கி அழிக்கக் கூடியவை. பிரக்கான் கைனன்சிஸ் புழு ஒட்டுண்ணிகள் புழுக்களைத் தாக்கி அழிக்கக் கூடியவை. அறுவடைக்குப் பின்னர் மக்காச்சோளத்தட்டைகளை உடனடியாக அகற்றி விட வேண்டும். புழு மற்றும் பயிர்களின் திசுக்களை துளைத்துச் செல்லும் மருந்துகளை, பரிந்துரைக்கப்பட்ட அளவு பயன்படுத்தி தெளிக்க வேண்டும்.

**-முனைவர் ரா.கோபாலகிருஷ்ணன், க.முத்துக்குமார், வே.மோகனே**
**பூச்சியியல் துறை,**

**வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி குள்ளப்புரம், தேனி-625 562.**

## சொட்டுநீர்ப் பாசனம் செய்துள்ள தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சலாமா

உடுமலையில் நடைபெற்ற விவசாயிகள் பயிற்சி கூட்டத்தில் ""பல விவசாயிகள் தாம் சொட்டுநீர்ப் பாசனம் செய்துள்ள தோட்டத்திற்கு ஆற்றுநீர்ப் பாசனமாக மேலும் மேலும் நீரை காடெங்கும் பாய்ச்சுவது களைகளைக் கிளப்பி விடும்" என்ற தகவலை வெளியிட்ட உடுமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் டாக்டர் பா.இளங்கோவன் மேலும் கூறியதாவது:

தென்னந்தோப்பில் களைகளை அழிப்பதற்காக கடும் நஞ்சை அதிகம் தெளிப்பது மரங்கள் வளர்ச்சி குன்றி பாதிப்படையச் செய்யும். எனவே தோப்பில் சிறு கருவிகள் கொண்டு எந்தக் களையையும் மடக்கி உழுது மூடி விடலாம் என்றார். அறியாமல் அதிக நீர்ப்பாய்ச்சுவது நம் தலையில் நாமே கொள்ளிக்கட்டை வைத்து சொறிவது போலத் தாங்க முடியாத தொல்லைக்கு வழி வகுக்கும் என்றார்.

பயிரின் நீர்த்தேவை அறியாமல் நீர் கட்டி, மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயிறு மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு ஊறுவிளைக்காது இருந்தாலே பூச்சிகள் பெருகாது. மகசூலும் குறையாது. தென்னை மரத்திற்கு நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் அமைத்து அதில் நுனியில் பைப் போன்ற "டேப்' முறை நிச்சயம் நுண்ணீர்ப் பாசனத்தின் பூரண பலன்களைப் பெற வாய்ப்பில்லாத சூழலை உருவாக்கும். பயிர் தேவைக்கு உரிய மண்வளம் பேணுவதற்கும் அதிக நீர் விடாது. குறிப்பாக களிமண் காடுகளில் கருப்பு மண்ணுடைய பகுதி எப்போதும் நீரைப் பிடித்து வைத்து ஒரு நீர் உட்புகா உபத்திரவத்தை தரும். இதற்கு சிலர் குளத்து வண்டல் என்ற பெயரில் களைகள் கடுமையாகவும் உப்புசத்து அதிகம் உடைய மேற்பரப்பு மண்ணை கடும் வெயிலில் காய்ந்த சத்தே குண்டுமணி அளவு கூட இல்லாத மட்டமான மண்ணை போட்டி போட்டுக் கொண்டு அள்ளி பரப்புவதும் மகா அறியாமையே. மண்புழு உரம் எளிதாக தயாரித்து இடுவதற்கு மனம் இருந்தாலே

போதும். மண்ணைப் பேணிட பல பயிர்கள் சாகுபடி மற்றும் பயிர் சுழற்சி முறைகள் நன்கு உதவும். இனியாவது விழித்துக் கொண்டு மண்ணைப் பேணுவோம் எனவும் தெரிவித்தார்.

## சின்ன சின்ன செய்திகள்



**பொறிப்பயிர்:** ஒரு பூச்சியினம் ஒன்றுக்கும் மேற்பட்ட பயிர் வகைகளில் தோன்றினாலும் ஒரு குறிப்பிட்ட வகை பயிர் அவற்றால் மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கும். இவ்வகைப் பயிர்களை வரப்புகளிலோ, வரப்பு ஓரங்களிலோ முக்கிய பயிரினூடே ஒரு சில வரிசைகளில் பயிரிட வேண்டும். பூச்சிகள் முதலில் இந்த பொறிப்பயிர்களைத் தேர்ந்தெடுத்து உண்ணும். அப்போது நாம் பாதுகாப்பு முறைகளை பொறிப்பயிர்களில் மட்டும் கடைப்பிடித்து பூச்சிகளை அழித்து அவை முக்கிய பயிர்களுக்கு பரவி சேதப்படுவதை குறைத்திடலாம். பொறிப்பயிர்களுக்கான உதாரணம்.

முக்கிய பயிர் - பருத்தி, தக்காளி, அவரை.
பொறிப்பயிர் - செண்டுமல்லி
கவரப்படும் தண்டுப்பூச்சி - பச்சைக்காய்ப்புழு

முக்கிய பயிர் - பருத்தி, நிலக்கடலை
பொறிப்பயிர் - சோளம்
கவரப்படும் தண்டுப்பூச்சி - குருத்து ஈ, தண்டுதுளைப்பான்

முக்கிய பயிர் - முட்டைக்கோசு, பூ கோசு
பொறிப்பயிர் - கடுகு
கவரப்படும் தண்டுப்பூச்சி - வைரமுதுகுப்பூச்சி

முக்கிய பயிர் -பருத்தி
பொறிப்பயிர் -வெங்காயம், பூண்டு
கவரப்படும் தண்டுப்பூச்சி - இலைப்பேன்
முக்கிய பயிர் - பருத்தி, தக்காளி, நிலக்கடலை
பொறிப்பயிர் - ஆமணக்கு
கவரப்படும் தண்டுப்பூச்சி - புருடூனியா புழு

**சோளம் சாகுபடி நுட்பங்கள்:** சோளம் தீவனம், தீவனப்பயிர் மற்றும் தானியப் பயிராகப் பயன்படுத்தப் படுகிறது. தமிழகத்தில் நாமக்கல், திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், விருதுநகர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் சோளம் ஆடிப்பட்டம் (ஜூலை - செப்டம்பர்), புரட்டாசி பட்டம் (அக்டோபர் - டிசம்பர்) மற்றும் கோடை காலங்களில் பயிரிடப்படுகிறது. கோ.30 என்ற ரகம் தீவனத்துக்கும், உணவுக்கும் ஏற்றது. இந்த ரகம் அதிக மகசூல் கொடுப்பதால் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. சோள சாகுபடியில் முக்கியமாக இரண்டு கட்டங்கள் உள்ளன. அதாவது பூ பூக்கும் போதும், கதிரில் பால் பிடிக்கும் போதும் மழை வந்து விடக்கூடாது. இதைக்கவனித்து சாகுபடி செய்வது நல்லது. விதைப்பு செய்த 30ம் நாள், பூ வைக்கும் 90ம் நாள் கதிர்களில் பால் பிடிக்கும். இந்த நாட்களில் மழை பெய்து விட்டால் கதிரில் பூஞ்சாணம் பிடித்து விடும். விளைச்சலும் நன்றாக இருக்காது. கோவில்பட்டியில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கே.12 என்ற ரகத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்த ரகம் மானாவாரி சாகுபடிக்கும் கரிசல் மண் வகைக்கும் ஏற்றது. தானியச் சோளத்தின் தற்போதைய பண்ணை விலை ரூ.21 முதல் 23 வரை சந்தையில் விற்கப்படுகிறது. தகவல் : முனைவர் ஆர்.ரவி கேசவன், பேராசிரியர் மற்றும் தலைவர், சிறுதானியங்கள் துறை,

த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003. தொலைபேசி: 0422 - 245 0507 **பப்பாளி பழத்தின் சிறப்பு:** இது பால் வடியும் வகையைச் சேர்ந்தது. பால் வடியும் பழங்கள் அனைத்தும் தனி மருத்துவ குணங்கள் நிறைந்தவை. இன்று விஞ்ஞானபூர்வமாக மிக சக்தி நிறைந்த பழமாக பப்பாளி அறியப்பட்டுள்ளது. இது அனைத்து காலங்களிலும் மலிவாக கிடைக்கின்ற பழமாகும். ஆண்டு முழுவதும் இந்திய சந்தையில் கிடைக்கக் கூடியது. பலரது வீட்டுத் தோட்டத்திலும் பப்பாளி மரம் இருக்கும்.

**பப்பாளியில் உள்ள சத்துக்கள்:** கலோரி 39 கிராம், கார்போஹைட்ரேட் - 7.2கி, புரதம் - 0.6கி, நார்ச்சத்து - 0.8 கி, வைட்டமின் ஏ - 1750மிகி, வைட்டமின் பி - 0.04மிகி, ரைபோபிளேவின் - 0.25 மிகி, நயாசின்- 0.2மிகி, வைட்டமின் சி- 57 மி.கி, கால்சியம் - 17 மிகி, இரும்புச்சத்து - 0.5மிகி, பாஸ்பரஸ் - 13 மிகி, பொட்டாசியம்-470 மிகி. பப்பாளியில் உள்ள வைட்டமின் "ஏ' சத்து மாலைக்கண் நோய்க்கு மருந்தாக பெருமளவு பயன்படுகிறது. இதிலுள்ள கால்சியம் மற்றும் பொட்டாசியம் உடலின் மெட்டபாலி சத்தை ஊக்குவிக்க வல்லது. குழந்தைகளுக்கு பல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு உதவுகிறது. வைட்டமின் பி.1, பி6, மற்றும் ரிபோப்ளேவின் போன்ற பி வைட்டமின்கள் தோலின் மினுமினுப்பதற்கு உதவுகிறது. செரிமானத்திற்கு உதவுகிறது. உடல் எடையை குறைக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. தகவல் : கி.ஜோதி லட்சுமி, வேளாண்மை அறிவியல் நிலையம், பாப்பரபட்டி, தர்மபுரி மாவட்டம். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**பசுமை கிராமங்களை உருவாக்க திட்டம் களம் இறங்குது சுற்றுச்சூழல் மன்றம்**

மதுரை: மதுரை மாவட்ட அரசு பள்ளிகளில் செயல்படும் சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் பசுமை படை சார்பில் 'பசுமை கிராமங்கள்' உருவாக்க கல்வித்துறை திட்டமிட்டுள்ளது.மாவட்டத்தில் 359 அரசு பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் பசுமை படை செயல் படுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் நூறு மாணவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் மூலம் பள்ளி வளாகத்தை தூய்மையாக வைத்திருத்தல், பிளாஸ்டிக் தீமை விழிப்புணர்வு, மரம் வளர்ப்பு மற்றும் பள்ளி வளாகத்தை பசுமையாக பராமரிப்பது உட்பட பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.இந்நிலையில், கிராமப்பகுதியில் செயல்படும் பள்ளிகள் சார்பில், அந்த கிராமத்தை தேர்ந்தெடுத்து, அங்கு மரங்கள் வளர்ப்பு, தெருக்கள், குளங்களை சீரமைத்து சுத்தமாக வைத்திருப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பசுமை கிராமமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.



சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் முனியாண்டி கூறியதாவது: முதன்மை கல்வி அலுவலர் ஆஞ்சலோ இருதயசாமி முயற்சியால், இந்தாண்டு சிறப்பாக செயல்பட்ட 43 பள்ளிகளின் சுற்றுச்சூழல் மன்றத்திற்கு தலா ரூ.10 ஆயிரம், பசுமை படைக்கு தலா ரூ.20 ஆயிரம் என சுற்றுச்சூழல் துறையால் பரிசு வழங்கப்பட்டது. இவற்றின்

செயல்பாட்டை மேலும் விரிவுபடுத்தும் வகையில் தான் 'பசுமை கிராமம்' உருவாக்கும் திட்டம், என்றார்.

## மழையால் சேதமான வீட்டினைசீரமைக்க நிதியுதவி வழங்கல்

புதுச்சேரி:ராஜ்பவன் தொகுதியில் மழையால் சேதமடைந்த வீட்டினை சீரமைக்க, என்.ஆர்.காங்., பொறுப்பாளர் அனிபால் நேரு நிதியுதவி வழங்கினார்.புதுச்சேரியில் கடந்த 2 நாட்களாக பெய்த மழையால், ராஜ்பவன் தொகுதிக்குட்பட்ட சங்கரதாஸ் சுவாமி வீதியில் வசிக்கும் பத்மாவதி என்பவரது வீட்டின் மேற்கூரை இடிந்து சேதமடைந்தது.இதுகுறித்து அறிந்த, ராஜ்பவன் தொகுதி என்.ஆர்.காங்., பொறுப்பாளர் அனிபால் நேரு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி, வீட்டினை சீரமைக்க நிதியுதவி வழங்கினார்.

## யானைக்குட்டி சேட்டை சுற்றுலா பயணிகள் 'குஷி'



மூணாறு: மாட்டுப்பட்டியில் பிறந்து ஒரு சில நாட்களே ஆன யானைக்குட்டி செய்யும் சேட்டையை கண்டு, சுற்றுலா பயணிகள் மகிழ்கின்றனர்.மூணாறு அருகே உள்ள மாட்டுப்பட்டி அணை முக்கிய சுற்றுலா பகுதியாகும். இங்குள்ள இன்டோ-சுவீஸ் மாட்டு பண்ணையில் பசுக்களின் தீவனத்திற்காக அணையின் கரையோரம் நூற்றுக்கணக்கான

ஏக்கரில் புல் வளர்க்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் பச்சை, பசேல் என காணப்படும் இந்த புல் மேடுகளில் காட்டு யானைகள் கூட்டமாக முகாமிட்டு சுற்றித்திரிவது வழக்கம்.கடந்த சில நாட்களாக மாட்டுப்பட்டி அணைப்பகுதியில் சுற்றித்திரிந்த 6 காட்டு யானைகள் கூட்டத்தில் இருந்த பெண் யானை, 2 தினங்களுக்கு முன்பு குட்டி ஈன்றது. தற்போது தாயுடன் புல்மேடுகளில் சுற்றித்திரியும் அந்த யானைக்குட்டியை சுற்றுலா பயணிகள் ஆச்சரியத்துடன் கண்டு வருகின்றனர்.
காட்டு யானைகள் கூட்டம் அந்த குட்டியைச்சுற்றி பாதுகாப்பு வளையம் அமைத்து பராமரிக்கும் விதம் வியப்பூட்டும் வகையில் உள்ளது. இதை மீறி, குட்டி யானை அங்கும் இங்கும் ஓடி செய்யும் சேட்டை ரசிக்கும்படி உள்ளதால், யானைக்கூட்டம் வரும் பகுதியை நோக்கி சுற்றுலா பயணிகள் வெகு நேரம் காத்திருக்கின்றனர்.

## ஒரு குடும்பத்துக்கு2 கிலோ துவரம் பருப்பு

மைசூரு: "சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்ததாக பறிமுதல் செய்யப்பட்ட, 2.36 லட்சம் குவிண்டால் துவரம் பருப்பு, தீபாவளியை முன்னிட்டு, ஒரு குடும்பத்துக்கு, 2 கிலோ வீதம் வினியோகிக்கப்படும்," என, கர்நாடக வருவாய் துறை அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் தெரிவித்தார்.
அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் கூறியதாவது: மாநிலம் முழுவதும் கிட்டங்கிகள் சோதனையிடப்பட்டு, சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த, 2.36 லட்சம் குவிண்டால் துவரம் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டது. இந்த பருப்பு,
தீபாவளியை முன்னிட்டு, ஒரு குடும்பத்துக்கு, 2 கிலோ வீதம் வினியோகிக்க தீர்மானித்துள்ளோம்.சாம்ராஜ்நகர் மாவட்ட கலெக்டர் குஞ்சப்பா மீது தாக்குதல் நடத்தியது தொடர்பாக, தவறு செய்தவர்கள்

மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். சாம்ராஜ்நகரில் சட்ட விரோதமான சுரங்க தொழிலுக்கு கடிவாளம் போட, கலெக்டர் நடவடிக்கை எடுத்ததால், சிலர் அவரை தாக்கியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## மரவகை எண்ணெய் வித்து இயக்கம் 6 மாவட்டங்களுக்கு ரூ. 90 லட்சம்

ராமநாதபுரம்:மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை உட்பட 6 மாவட்டங்களில் 'மரவகை எண்ணெய் வித்துக்கான குறு இயக்கம்--3' திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.எண்ணெய் வித்துகளுக்கான தேசிய இயக்கத்தை, மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது. இதில் 3 விதமான திட்டங்கள் உள்ளன. இதற்கு மத்திய, மாநில அரசுகள் தலா 50 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. 'எண்ணெய் வித்துக்கான குறு இயக்கம்--1' என்ற திட்டம் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர்த்து 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இதில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துகளின் பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. தற்போது, 'மரவகை எண்ணெய் வித்துக்கான குறு இயக்கம்--3' திட்டம் மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், நெல்லை, துாத்துக்குடி, மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு உள்ளது.இதன்படி, தரிசு நிலங்களில் வேம்பு, புங்கை, இலுப்பை ஆகிய மரவகை எண்ணெய் வித்துகளின் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும். இதற்காக ரூ. 90 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பழநியில் கத்தரிக்காய் விலை வீழ்ச்சி



பழநி: விளைச்சல் அதிகரித்துள்ள போதும் பூச்சி தாக்குதலால் தரம் குறைந்த கத்தரிக்காய், பழநி மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.திண்டுக்கல் மாவட்டம் பழநி, ஒட்டன்சத்திரம், சத்திரப்பட்டி, பாலசமுத்திரம் பகுதிகளில் மழை பெய்துவருவதால் கத்திரிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. கடந்த இருவாரங்களுக்கு முன் பச்சைக் கத்தரிக்காய் ஒரு மூடை(20கிலோ) ரூ.300, வெள்ளைக் கத்தரிக்காய் ஒரு மூடை ரூ.1000 வரை விற்றது. தற்போது காய்களில் அதிகளவில் பூச்சி, புழுக்கள் தாக்குதல், பழுத்து மஞ்சள் நிறத்துடன் தரமின்றி உள்ளதால் பச்சைக்கத்தரி மூடை ரூ.150க்கும், வெள்ளை கத்தரி மூடை ரூ.250 முதல் ரூ.300 என வெகுவாக விலை குறைந்து விட்டது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமல் பாதிப்பு அடைந்துள்ளனர்.சத்திரப்பட்டி மாட்டுப்பாதை விவசாயி சேனாதிபதி கூறுகையில், “ரூ.30 ஆயிரம் செலவில் ஒரு ஏக்கரில் பச்சை, வெள்ளை கத்திரி பயிரிட்டுள்ளேன். 15 நாட்களுக்கு முன் நல்ல விலை கிடைத்தது. மருந்து தெளித்தும் புழுக்களை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆறு மூடை காய்களில் 2 மூடை வீணாகி விடுகிறது. ஆட்கள் காய்பறிப்பு கூலி, உரம், மருந்து தெளிப்பு என செலவு

அதிகரித்துள்ளது. காய்வரத்து அதிகரித்தாலும், தரம் குறைந்ததால் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை,”என்றார்.

## மழை அளவு

மதுரை, :மதுரையை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு வருமாறு (மி.மீ., யில்)

பெரியாறு - 0.6

தேக்கடி - 0.8

சண்முகாநதி - 7

உத்தமபாளையம் -0.7

பேரணை - 1.6

மதுரை - 12

சாத்தையாறு - 11

மேட்டுப்பட்டி - 13

கள்ளந்திரி - 26

புலிப்பட்டி - கஎ17

மேலூர் - 44

தனியாமங்கலம் - 24

இடையபட்டி - 13

விரகனூர் -7

## ஏற்றுமதியாகும் 'கண்வலி' கிழங்கு:சாகுபடி மும்முரம்



பழநி : பழநி, ஒட்டன்சத்திரம் பகுதியில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மருத்துவ குணமிக்க கண்வலி கிழங்கு சாகுபடி மும்முரமாக நடக்கிறது.திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரம் கொத்தயம், பொருளூர், காளிப்பட்டி பகுதிகளில் செப்டம்பர், அக்டோபரில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கண்வலி கிழங்கு சாகுபடி செய்யப் படுகிறது.ஆந்திர மாநிலத்தில் மொத்த வியாபாரிகள், கிலோ கணக்கில் 'கண்வலி' கிழங்குகளை வாங்கி கிராமப்புற விவசாயிகளிடம் விற்கின்றனர். அவர்கள் கிழங்குகளை நிலத்தில் வரிசையாக புதைத்து சொட்டுநீர் பாசனம் முறையில் வளர்க்கின்றனர்.
மண்ணில் புதைத்த கிழங்குகள் 20 நாட்களில் துளிர்விட்டு செடி பந்தலுக்கு வந்துவிடும். மூன்று மாதத்தில் பூக்கள் பூத்து காய்காய்க்க துவங்கிவிடும். அவற்றை பறித்து தட்டி, விதைகளை எடுத்து நன்றாக காயவைத்து இடைத்தரகர்களிடம் விவசாயிகள் விற்கின்றனர்.
திருப்பூர் மாவட்டம் மூலனுார் சந்தையில் கண்வலி விதை ஒரு கிலோ ரூ.800 முதல் ரூ.1000 வரை விற்கின்றனர். கண்வலி கிழங்கு மருத்துவ பயன்பாட்டிற்காக அமெரிக்கா, ஆஸ்ரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.
விவசாயிகள் இவ்வாண்டிற்கான சாகுபடி பணிகளை மும்முரமாக மேற்கொண்டுள்ளனர்.கொத்தயம் விவசாயி ராமசாமி கூறுகையில்,“ 2 ஏக்கர் பரப்பளவில் கண்வலி கிழங்கு சாகுபடிசெய்துள்ளேன். தற்போது பூக்கள் பூக்க துவங்கிஉள்ளது. தொடர்ந்து மழைபெய்தால் காய்ப்பு நன்றாக இருக்கும். தையில் விதை எடுப்போம். அப்போது சூழ்நிலையை பொறுத்து விலை உயர வாய்ப்புள்ளது. கிழங்கு விலை, ஆட்கள், உரம், சொட்டுநீர் பாசன அமைப்பு என ஏக்கருக்கு ரூ.1லட்சம் முதல் ரூ.2லட்சம் வரை செலவாகிறது. அரசு கண்வலி கிழங்கு பயிரிட மானியம் வழங்கினால் உதவியாக இருக்கும் ,”என்றார்.

## துவரம் பருப்பு கிலோ ரூ.130: அரசு முயற்சியால் விலை சரிவு



சென்னை: குறைந்த விலையில் பருப்பு விற்கும், தமிழக அரசின் முயற்சியால், வெளிசந்தையில் தான்சானியா துவரம் பருப்பு விலை கிலோ, 130 ரூபாயாக குறைந்துள்ளது.வெளிமாநில வரத்து குறைவு மற்றும் பெரும் நிறுவனங்கள் பதுக்கலால், தமிழகத்தில், அக்டோபரில், ஒரு கிலோ துவரம் பருப்பு, 225 ரூபாய் வரை சென்றது. மற்ற பருப்பு வகைகளும், எப்போதும் இல்லாத வகையில், விலை உயர்ந்ததால், மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். விலை உயர்வைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு, 50 ஆயிரம் டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்ததோடு, பதுக்கல் மீதும் நடவடிக்கையை துவக்கியது.இந்நிலையில், மத்திய அரசு இறக்குமதி செய்ததில், 500 டன் துவரம் பருப்பை பெற்ற தமிழக அரசு, நவ., 1 முதல், கூட்டுறவு சங்க கடைகளில், கிலோ, 110 ரூபாய்க்கு விற்று வருகிறது. இதனால், வெளி சந்தையில், தான்சானியா துவரம் பருப்பு விலை அதிரடியாக சரிந்துள்ளது.அக்டோபரில், 100 கிலோ எடையுள்ள, ஒரு மூட்டை தான்சானியா பருப்பு, 16 ஆயிரம் ரூபாய்; சில்லரையில், கிலோ, 170 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, ஒரு மூட்டை முதல் ரகம், 12 ஆயிரத்து, 500 ரூபாய்; சில்லரையில் கிலோ, 130 ரூபாய்க்கு

கிடைக்கிறது; இரண்டாம் ரகம், கிலோ, 115 ரூபாய்க்கு கிடைக்கிறது.

தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறுகையில், "பதுக்கல் மீதான நடவடிக்கையாலும், குறைந்த விலையில், பருப்பு விற்கும் மாநில அரசின் முயற்சியாலும், தான்சானியா பருப்பு விலை, கிலோவுக்கு, 40 ரூபாய் வரை குறைந்துள்ளது. தீபாவளிக்குள், 110 ரூபாயாக குறையும்," என்றார். இறக்குதி பருப்பு விலை குறைந்தாலும், இந்திய துவரம் பருப்பு விலை, கிலோ, 180 ரூபாய் என்ற அளவிலேயே தொடர்ந்து விற்கப்படுகிறது.

**திருவாரூரில் பொழுதுபோக்கு பூங்கா சிங்கப்பூர் நிறுவனம் ஆர்வம்**

திருவாரூர் மாவட்டத்தில், 'அம்யூஸ்மென்ட் பார்க்' என்றழைக்கப்படும் பொழுதுபோக்கு பூங்காவை அமைக்க, சிங்கப்பூரைச் சேர்ந்த தனியார் நிறுவனம் விருப்பம் தெரிவித்து உள்ளது. தமிழகத்தில், பொழுதுபோக்கு பூங்காக்களை அமைக்க வேண்டும் என்றால், சென்னை நகரமே, தனியார் நிறுவனங்களின் முதல் தேர்வாக அமைகிறது. சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டின் போதும், 'ஒண்டர்லா' என்ற நிறுவனம், சென்னையையே தேர்ந்தெடுத்தது. கோவை, மேட்டுப்பாளையம்; மதுரை, பரவை ஆகிய இடங்களைத் தவிர்த்து, மாநிலத்தில் வேறெங்கும் பெரிய அளவில் பொழுதுபோக்கு பூங்காக்கள் இல்லை. இந்நிலையில், தமிழகத்தின் மத்திய பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்க, சிங்கப்பூர் நிறுவனம் ஆர்வமாக இருக்கும் தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து, தொழில்துறை அதிகாரிகள் கூறியதாவது: சிங்கப்பூரைச் சேர்ந்த தனியார் நிறுவனம், திருவாரூர் மாவட்டத்தில் பொழுதுபோக்கு பூங்காவை அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளது. எனினும் இது ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது.

அந்த மாவட்டத்தில் பூங்காவை எங்கு அமைப்பது; அதற்கான இடம் தேர்வு போன்ற அம்சங்களை முடிவு செய்த பின், தொழில்துறையை அணுகினால் தேவையான உதவிகளை செய்வதாக அவர்களிடம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.இது உறுதி செய்யப்பட்டால், தமிழகத்தின் மத்திய பகுதியில் அமையும் மிகப்பெரிய தனியார் பொழுதுபோக்கு பூங்காவாக திகழும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## குளச்சல் ஆய்வுக்கு வருவோம்: மீனவர்கள் கோரிக்கை

'கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் துறைமுக ஆய்வுப்பணியில் மீனவ பிரதிநிதிகளையும் சேர்க்க வேண்டும்' என, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குளச்சல் துறைமுகத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிக்க, தகுதி வாய்ந்த ஆலோசகர்களிடம் அறிக்கை கேட்டு, துாத்துக்குடி துறைமுக நிர்வாகம் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்ததும், நவ., 17க்குள் ஆலோசகர்கள் இறுதி செய்யப்பட உள்ளனர். குளச்சல் துறைமுகத்தை ஒட்டி, 40 மீனவ கிராமங்கள் உள்ளன. எனவே, திட்டத்தை செயல்படுத்தும் முன், அது, உண்மையிலேயே அனைத்து மக்களுக்கும் பயன் தருமா என்பதை அறிய, மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவ பிரதிநிதிகளிடமும் ஆலோசிக்க வேண்டும் என, குளச்சல், இனயம், தேங்காய்பட்டினம் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : தமிழகம் மற்றும் கர்நாடக காவிரி நீர்பிடிப்பு பகுதயில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்வரத்து, 5,386 கனஅடியிலிருந்து 13,956 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 64.91 அடியாகவும், நீர் இருப்பு 28.48

டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 1,000 கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 300 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**சர்க்கரை நோயாளிகளின் புண்களுக்கு மருந்தாக பயன்படும் 'மனுக்கா' தேன்**




தேனி :சர்க்கரை நோயாளிகளுக்கு கால் மற்றும் பாதங்களில் ஏற்படும் புண்களை குணப்படுத்த மருந்துக்கு பதிலாக 'மனுக்கா' தேன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.தேன் மருத்துவ குணம் உடையது.. தேனில் 'ஹைட்ரஜன் பெராக்சைடு' என்ற 'ஆண்டி பாக்டீரியல்' 9 சதவீதம் உள்ளது. இதன் மூலம் தேனிற்கு மருத்துவ குணம் ஏற்படுகிறது. தீக்காயங்களுக்கு தேனை மருந்தாக பயன்படுத்தும் வழக்கம் தமிழர் பண்பாட்டில் உள்ளது.இந்த தேனை விட 'மனுக்கா' என்ற தேனில் 'மெத்தல் கிளையாக்சால்' என்ற 'ஆன்டிசெப்டிக்' 16 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இதனால் 'மனுக்கா' தேன், சாதாரண தேனை விட அதிக மருத்துவ குணம் கொண்டதாக உள்ளது.'மனுக்கா' தேன் என்பது, நியூசிலாந்து நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள தீவுகளில் அதிகமாக வளரும் 'மனுக்கா' என்னும் ஒருவகை செடிகளின் மகரந்தங்களின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இது தான் உலகிலேயே தரம் வாய்ந்த தேனாக

கருதப்
படுகிறது. இது 'யுனிக் மனுக்கா பேக்டர்' என்ற சான்று பெற்று உள்ளது.இந்த 'மனுக்கா' தேன் சர்க்கரை நோயாளிகளின் கால் மற்றும் பாதங்களில் ஏற்படும் புண்களை குணப்படுத்துவதற்கு சிறந்த மருந்தாக பயன்பட்டு வருகிறது.
இதன் மருத்துவ குணம் குறித்து தேனி 'நலம்' மருத்துவமனை சர்க்கரை நோய் சிறப்பு டாக்டர் சி.பி.ராஜ்குமார் கூறியதாவது:'மனுக்கா' தேனில் 'ஆன்டிசெப்டிக்' 16 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளதால், இதை சர்க்கரை நோயாளிகளின் கால் மற்றும் பாதங்களில் ஏற்படும் புண்களுக்கு மருந்தாக பயன்படுத்துகிறோம். மிகவும் அடர்த்தி நிறைந்த இந்த தேன், நோயாளியின் புண்களுக்குள் வெளியே இருந்து
கிருமிகள் உள்ளே செல்லாமல் தடுக்கும். உள்ளே இருக்கும் கசடுகளையும், தண்ணீரையும் அகற்றி விடும். இதனால் புண்கள் விரைவாக ஆறி விடும்.
இதுவரை 100க்கும் மேற்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கு 'மனுக்கா' தேனை பயன்படுத்தி சிறப்பான முடிவுகளை பெற்றுள்ளோம். இனிப்பு சுவை மிகுந்த இந்த தேன் ஒரு கிலோ 14 ஆயிரம் ரூபாயை விட அதிகம். சர்க்கரை நோய்க்கான உயர்ரக மருந்துகளோடு ஒப்பிடு கையில், இதன் விலை அதற்கு நிகராகவே உள்ளது. பலன் பல மடங்கு அதிகமாக உள்ளது.
தற்போது 'மனுக்கா' செடிகள் ஆஸ்திரேலியா, அமெரிக்காவின் கலிபோர்னியாவிலும் அதிகம் வளர்க்கப்படுகின்றன. நம் நாட்டிலும் உற்பத்தி செய்தால் இதன் விலை குறையலாம். இவ்வாறு கூறினார்.

**காத்திருப்பு ! : வைகை நீருக்காக விவசாயிகள்... : பயிர்கள் பாதிக்கும் அபாயம்**

பரமக்குடி: பரமக்குடி சுற்றுவட்டாரப் பகுதி களில் போதிய மழை பெய்யாததால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ள நெல் பயிர்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனால் வைகை நீரை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

பரமக்குடி ஒன்றியத்தில் 10 ஆயிரம் ஏக்கர், நயினார்கோவில் ஒன்றியத்தில் 15 ஆயிரம் ஏக்கர், போகலூர் ஒன்றியத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளன.

வானம் பார்த்த பூமி என்பதால் பருவ மழையை நம்பி சாகுபடி செய்த விவசாயிகள் போதிய மழை பெய்யாததால் கவலையடைந் துள்ளனர். வைகை ஆற்றுப் படுகையில் கண்மாய் பாசனத்தை எதிர்நோக்கி பரமக்குடியில் 10 ஆயிரம், நயினார்கோவிலில் 7000, போகலூரில் 3000 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மீதமுள்ளவைகள் மானா வாரி நிலங்களாக உள்ளன. தற் போது 110 நாட்களில் பலன் தரும் ஆடுதுறை 36, ஆடுதுறை 45 ரகங் களும், 125 நாட்களில் பலன் தரும் ஆடுதுறை 39(கல்சர்பொன்னி), ஐ.ஆர்., 36 ரகங்களும் சாகுபடி செய்யப் பட்டுள்ளன. பிபிடி 5204(கர்நாடகா பொன்னி), அம்பாசமுத்திரம் 16 ஆகிய ரகங்கள் சில ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன.

விவசாயிகள் ஏக்கருக்கு 10 ஆயிரம் முதல், 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ள நிலையில் தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் வளர்ச்சியடையாமல் உள்ளது. சாகுபடி செய்துள்ள நெல் பயிர்களை காப்பாற்ற வைகை ஆற்றில் தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வைகை பாசன விவசாயிகள் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் மதுரைவீரன் கூறியதாவது: வைகை அணையில் தற்போது 1860 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. பார்த்திபனூர் மதகு அணை தொடங்கி பரமக்குடி, நயினார்கோவில், போகலூர்

உள்ளிட்ட கடை மடை வரை 67 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. போதிய மழை பெய்யாததால் பயிர்கள் தண்ணீர் இன்றி வளர்ச்சி யடையாமல் உள்ளது. வைகை ஆற்று பாசன பகுதிகள் செழிக்க உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும், என்றார்.

## சிறு தானிய இனிப்பு: மாணவியர் அசத்தல்

ஆத்தூர்: வீரகனூரில், சிறு தானியங்களில் இருந்து இனிப்பு உணவு தயாரிப்பு பயிற்சியை, கல்லூரி மாணவியர் செய்து காட்டினர். ஆத்தூர் அருகே, வீரகனூரில் கிராமப்புற வேளாண்மை, புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறு தானியங்களில் இருந்து, இனிப்பு உணவுகள் தயாரிப்பது குறித்து, வேளாண் கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம் அளித்தனர். தலைவாசல் வேளாண் அலுவலர் இளவரசன் தலைமை வகித்தார். இதில், மரவள்ளி கிழங்கு சாகுபடிக்கு ஏற்ப விதை நேர்த்தி செய்தல், இயற்கை வேளாண்மை, கால்நடை தீவனமான வைக்கோலை பதப்படுத்தும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தனர். தொடர்ந்து, சிறுதானியங்களில் இருந்து, பல வகை இனிப்புகள் தயார் செய்தனர். ராகியில் இருந்து, பிஸ்கட், லட்டு தயார் செய்து, விவசாயிகளுக்கு வழங்கினர்.

## 18 ஏரிகளில் ஒன்று மட்டுமே நிரம்பியது: மேட்டூர் கோட்ட விவசாயிகள் விரக்தி

மேட்டூர்: பொதுப்பணித்துறை, கட்டுப்பாட்டில் உள்ள, 18 ஏரிகளில், பருவமழையால் ஒரு ஏரி மட்டுமே நிரம்பியுள்ளது. இதர, 17 ஏரிகளில் நீர் இருப்பு கவலைக்கிடமாக இருப்பது, விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

பொதுப்பணித்துறை மேட்டூர் கோட்டத்தின் கட்டுப்பாட்டில், மேட்டூர், கொளத்தூர், ஓமலூர், சங்ககிரி பகுதியில் மொத்தம், 18 ஏரிகள் உள்ளன. இதில், 42 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட பெரிய

தும்பல்காட்டு பள்ளம் ஏரியும், 4.5 மில்லியன் கனஅடி கொண்ட சிறிய நாச்சம்பட்டி ஏரியும் அடக்கம். ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை சீசனில், 18 ஏரிகளும் நிரம்பும். மொத்தம், 4,500 ஏக்கர் ஏரி பாசன விவசாயிகள் சாகுபடி மேற்கொள்வர். நடப்பாண்டு வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்த போதிலும், மேட்டூர் கோட்டத்தில் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. சங்ககிரி பகுதியில், நாச்சம்பட்டி ஏரி மட்டுமே சமீபத்தில் நிரம்பியதால், 106 ஏக்கர் பாசன பகுதியில் விவசாயிகள் சாகுபடி மேற்கொண்டுள்ளனர். பொன்னுசமுத்திரம் ஏரி, 75 சதவீதம், குள்ளம்பட்டி ஏரி, 50 சதவீதம் நிரம்பியுள்ளது. கொத்தனேரி, செம்மலை சிவிலி கரடு ஏரி, பெரியசக்களச்சி ஏரி, கோடுபள்ளம் ஏரி, கோட்ட குள்ளமுடையான் ஏரி ஆகியவை, 20 முதல், 50 சதவீதம் மட்டுமே நிரம்பியுள்ளது. பி.என்.பட்டி ஏரி, குண்டக்கல் ஏரி, நாச்சினாம்பட்டி ஏரி, வடமனேரி, தாசசமுத்திரம் ஏரி, பண்ணப்பட்டி ஏரி, பொம்மியம்பட்டி ஏரி, மதுரகாளியம்மன் ஏரி, கொத்தனேரி, கே.மோரூர் ஏரி ஆகிய, ஒன்பது ஏரிகளின் நீர்பிடிப்பு பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால், சில ஏரிகள் வறண்டும், சில ஏரிகளில், 20 சதவீதத்துக்கும் குறைவான தண்ணீருமே காணப்படுகிறது. நடப்பாண்டு பருவமழை தாமதம் ஆன நிலையில், மேட்டூர் கோட்டத்தில் ஒரு ஏரியை தவிர, இதர, 17 ஏரிகள் நிரம்பாதது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

## நெல் பண்ணைப்பள்ளி பயிற்சி

நாமக்கல்: வீசாணம் கிராமத்தில், நெல் பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம், வேளாண் துறை சார்பில் நடந்தது. நாமக்கல் வட்டார வேளாண் தொழில் நுட்ப மேலாண் முகமை சார்பில், வீசாணம் கிராமத்தில், விவசாயிகளுக்கான நெல் பண்ணைப்பள்ளி நடந்தது. மாவட்ட வேளாண்

இணை இயக்குனர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். அதில், பண்ணைப்பள்ளியின் அவசியம், மானியத் திட்டம், அதன் நோக்கம், அதனால் ஏற்படும் விளைவு குறித்து விளக்கப்பட்டது. மேலும், இயந்திர நடவு மூலம் ஏற்படும் நன்மைகள், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், உர நிர்வாகம், பயிர் பாதுகாப்பு பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை குறித்து விவசாயிகள் ஆர்வமுடன் கேட்டதுடன், வரும் காலங்களில் இயந்திர நடவு முறையை கட்டாயமாக பின்பற்றி பயன் அடைவோம் என்று, உறுதி அளித்தனர்.

## பவானிசாகர் அணை 2 அடி உயர்வு

பவானிசாகர்: ஈரோடு, நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழையால், பவானிசாகர் அணை நீர்மட்டம், ஒரே நாளில், 2 அடி உயர்ந்துள்ளது. பவானிசாகர் அணை மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள சுமார், 2.50 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பாசனம், குடிநீர்த் தேவைக்காகவும் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் வேகமாகச் சரிந்து வந்தது. ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்கிறது. நேற்று முன்தினம், வினாடிக்கு, 2 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது. நேற்று, 4 ஆயிரத்து, 796 கன அடியாக உயர்ந்துள்ளது. நீர்வரத்து அதிகரித்து வருவதால், பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது, நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அணை நீர்மட்டம் ஒரே நாளில், 2 அடி உயர்ந்து, தற்போது, 58.63 அடியாக உள்ளது. அதே சமயம், கீழ்பவானி வாய்க்காலில், நேற்று முன்தினம் முதலே, பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பீன்ஸ் விலையில் திடீர் சரிவு:ஊட்டி விவசாயிகள் கவலை

ஊட்டி:ஊட்டி பீன்ஸ் விலை யில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஊட்டி பீன்ஸ்சுக்கு மேட்டுப்பாளையம் உட்பட வெளிச் சந்தையில் மவுசு அதிகம். இந்நிலை யில், அதன் விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.விவசாயிகள் சிலர் கூறுகையில், 'ஊட்டி மார்க்கெட்டில் மொத்த விற்பனையாளர்கள், ஒரு கிலோ பீன்ஸ், 10 ரூபாய்க்கு ஏலம்எடுப்பதே காரணம்' என்றனர்.காய்கறி மொத்த விற்பனையாளர் ராஜா முகமது கூறுகையில், “ஊட்டி பீன்சுக்கு, வெளிச்சந்தையில் கிராக்கி அதிகம். தற்போது ஒட்டன்சத்திரம், தாளவாடி, மைசூரு, பெங்களூரு உட்பட இடங்களில், அதிகளவு பீன்ஸ் சாகுபடி செய்யப்பட்டு, மேட்டுப்பாளையம் உட்பட சந்தைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால், ஊட்டி பீன்ஸ்சுக்கு கிராக்கி குறைந்து வருகிறது,” என்றார்.

## சீமைக்கருவேல மரங்களால் அவதி

வடமதுரை, :வடமதுரை ஒன்றியம், சுக்காம்பட்டி மேற்கு தெருவையொட்டி வடக்கு மற்றும் மேற்கு புறங்களில் விவசாய தோட்டங்கள் உள்ளன. தோட்டங்களை பாதுக்காப்பதற்காக, புறம்போக்கு இடத்தையும் ஆக்கிரமித்து மனித இனத்திற்கு கேடுவிளைவிக்கும் சீமை கருவேல் மரங்களை வேலியாக உருவாக்கியுள்ளனர். மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிக்கு வெகு அருகில், வளர்ந்துள்ள சீமை கருவேல மரவேலியால், அடிக்கடி விஷப்பூச்சிகள், பாம்புகள் வீடுகளுக்குள் நுழைந்துவிடுகின்றன. எனவே, இப்பகுதியில் இருக்கும் புறம்போக்கு இடத்தினை அளவீடு செய்து, சீமை கருவேல மர ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இதன் மூலமே விஷ

பூச்சிகள், மறைமுக நோய் பாதிப்புகளில் இருந்து இப்பகுதியினருக்கு விடிவு காலம் கிடைக்கும். வடமதுரை ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## காளான் வளர்ப்பு பயிற்சி முகாம்

பழநி,:பழநி அருகே மானுரில் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலையம் மாணவர்கள் கிராமப்புற தங்கல் திட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழு பெண்களுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. மதுரை வேளாண்கல்லூரி பேராசிரியர் லட்சுமி முன்னிலைவகித்தார். இதில் சுயஉதவிபெண்களுக்கு காளான் வளர்ப்புமுறைகளை செய்முறைவிளக்கமாகவும், அவற்றை சந்தையிடும் விதம் குறித்தும் மாணவர்கள் பயிற்சியளித்தனர். மானூர், கோரிக்கடவு, நரிக்கல்பட்டியை சேர்ந்த மகளிர் சுயஉதவிபெண்கள் பலர் பங்கேற்றனர். மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் விக்னேஷ்குமார், கார்த்திக், பாலக்குமார், செந்தில்குமார், நீலமணிகண்டன், ஹரிசித்குமார் ஏற்பாடுகளை செய்தனர்.

## தட்டைப்பயறு சாகுபடி திண்டுக்கல்லில் அமோகம்

திண்டுக்கல்,:திண்டுக்கல் பகுதியில் மானாவரியில் தட்டைப் பயறு, விதைப்பு தீவிரமடைந்துள்ளது. மானாவரியில் தட்டைப் பயறு விதைப்புக்கு ஏற்ற காலமான ஆடி மாதத்தில் விதைப்பு பணியை துவங்கினர். இவர்களுக்கு பயன் தரும் வகையில் கடந்த சில நாட்களாக பருவமழையும் பெய்து வருகிறது. இக்காலத்தில் விவசாயிகள் தட்டைப் பயறு, சோளம் உள்ளிட்ட பயிர் வகைகளை விதைப்பு செய்து வருகின்றனர். மானாவரி பகுதியில் தட்டைப் பயறு செய்த விவசாயிகளுக்கு அதிக மகசூலுடன் லாபத்தையும் பெற்று தருகிறது. திண்டுக்கல் பெரியக்கோட்டை, பில்லநாயக்கன்பட்டி, அதன் சுற்று பகுதி கிராமங்களில் தட்டைப்பயறு சாகுபடி அமோகமாக நடந்து வருகிறது. தட்டைப் பயறு கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விலை

போகிறது. இப்பயிர்கள் கடுமையான வெயிலிலும் மழையிலும் நிலைகுலையாமல் வேர் ஊன்றி திடமாக நிற்கக்கூடியது. ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை லாபம் தந்து விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடியதாக அமைந்துள்ளது. இதற்கு குறைந்த அளவு விதைகளை பயன்படுத்தினாலே போதும். மானாவாரி பயிராக இருக்கும் தட்டைப் பயறு, இடைவிடா நீர் ஆதாரம் இருந்தால் மற்ற பயிர்களின் இடையில் ஊடுபயிராக கூட விதைக்கலாம். வேளாண் துறை இணை இயக்குனர் சம்பத்குமார் கூறுகையில்," பருவ மழை துவங்கியுள்ளதால் விவசாயிகள் நெல் பயிர் மட்டுமின்றி, கம்பு, சோளம் , தட்டைப் பயறு, துவரம், கடலை போன்றவற்றையும் பயிரிடலாம். பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து அதிகப்படியான மகசூல் தரக்கூடிய காலம் இது, என்றார்.

## தேனி மாவட்ட அணைகளில் நீர்மட்டம் கடந்த ஆண்டை விட குறைவு

தேனி,:தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அணைகளின் நீர் மட்டம் குறைவாக உள்ளது. தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சராசரி அளவான 170 மி.மீ., அளவை தாண்டி 383 மி.மீ., அளவிற்கு பெய்தது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்மட்டத்தை ஒப்பிடும்போது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாகவே உள்ளது.கடந்த ஆண்டு நவ.,2 ல் வைகை அணை நீர் மட்டம் 53.12 அடியாக இருந்தது. வினாடிக்கு 2,188 மில்லியன் கன அடி நீர் வரத்து இருந்தது.வினாடிக்கு 1660 மில்லியன் கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இந்த ஆண்டு வைகை அணை நீர் மட்டம் 48.82 அடியாக உள்ளது. கடந்த ஆண்டை விட தற்போது அணையின் நீர் மட்டம் 4.3 அடிகுறைவாக உள்ளது.

பெரியாறு அணை நீர் மட்டம் கடந்த ஆண்டு நவ.,2 ல், 137.30 அடியாக இருந்தது. வினாடிக்கு 2,511 மில்லியன் கன அடிநீர் வரத்தும், 1,786 கன அடிநீர் வெளியேற்றமும் இருந்தது. தற்போது பெரியாறு அணை நீர் மட்டம் 125 அடியாகவும், வினாடிக்கு 1,460 மில்லியன் கன அடிநீர் வரத்தும், 511 மில்லியன் கன அடி வெளியேற்றமும் உள்ளது. கடந்த ஆண்டை விட தற்போது நீர்மட்டம் 12.3 அடி குறைவாக உள்ளது. சோத்துப்பாறை அணை கடந்த ஆண்டின் இதே நாளை போல் இந்த ஆண்டும் 126.80 அடியான முழு கொள்ளவை எட்டியுள்ளது. அதேபோல் மஞ்சளாறு அணையும் முழு கொள்ளளவை தற்போது எட்ட உள்ளது.

**விவசாயிகளுக்கு அழைப்பு**

தேனி,:விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் நலன் கருதி முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் "மெரூன்' நிற அடையாள அட்டை பெற்றவர்கள் திருமண உதவி, முதியோர் ஓய்வூதியம், கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் காயம் அடைந்தவர்களுக்கு உதவி தொகை, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நிதி உதவி பெற தகுதிவாய்ந்தவர்கள், வி.ஏ.ஓ., மூலம் சமூக பாதுகாப்பு திட்ட தனித்தாசில்தாரிடம் விண்ணப்பித்து பயன்பெறலாம், என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

**புறக்கணிப்பு ! : நீர், நிலவள திட்டத்தில் சருகணி கோட்டம் : பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கும்**

காரைக்குடி: நீர்,நிலவள திட்டத்தில் தொடர்ந்து சருகணி ஆறு வடிநில கோட்டம் புறக்கணிக்கப்பட்டு வருவதால், விவசாயத்திற்கு தண்ணீர் இன்றி சாகுபடி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, 2ம் கட்ட

திட்டத்தில் சேர்க்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாசன வழித்தடத்தை மேம் படுத்தும் நோக்கில் 2007ம் ஆண்டு முதல் நீர், நிலவள திட்டம் உலக வங்கி கடன் உதவியுடன் செயல் படுகிறது. முதற்கட்ட பணிக்கு ரூ.2,544 கோடி பெற்று பொதுப் பணி, வேளாண் உள்ளிட்ட எட்டு துறைகள் ஒருங்கிணைந்து இத் திட்டம் செயல்படுத்தின. நீர்நிலை களை புனரமைத்தல், நீர் செறி வூட்டும் கட்டமைப்பு உருவாக்கல், நீர் வழித்தடம் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டன. இதனால் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகள் பலன் அடைந்தன.சிவகங்கையில் மணிமுத்தாறு, பாம்பாறு வடிநில கோட்டம் ரூ.48 கோடியில்; ராமநாதபுரத்தில் உத்தர கோசமங்கை ஆறு வடிநில கோட்டத்தில் பணிகள் நடந்தது.

ரூ.3,000 கோடி திட்டம்

இத்திட்டம் முடிந்த நிலையில் இரண்டாம் கட்ட பணிக்கு உலக வங்கி ரூ.3,000 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதில், கீழ் வைகை வடிநில கோட்ட பகுதியான மானாமதுரை, பார்த்திபனூர், விரகனூர், பரமக்குடி, ராமநாதபுரம் வரையில் நீர்பாசன வழித்தடங்கள் ஏற் படுத்தும் பணி நடக்க உள்ளது. சிவகங்கையில், சருகணி ஆறு குறு வடிநில கோட்டம், கோட்டக் கரையார் துணைவடிநில கோட்டத்தின் கீழ் வருவதால், இத்திட்டத்தின் பயன் கடந்த 20 ஆண்டாக சருகணி ஆறு கோட்டத்திற்கு கிடைக்காமல் போய்விட்டது.

சருகணியாறு வடிநில கோட்டம் அலவாக்கோட்டை நாமனூர் கண்மாயில் தொடங்கி, சிவகங்கை, கல்லல், தேவகோட்டை, சருகணி வழியே 85 கி.மீ., தூரம் கடந்து ஆர்.எஸ்., மங்கலம் கண்மாயில் முடிகிறது. இடைப்பட்ட பகுதியில் 20 அணைகள் உள்ளன.

சருகணி புறக்கணிப்பு

இந்த ஆற்றின் மூலம் சிவ கங்கையில் 4,000 எக்டேர், ராமநாத புரத்தில் 2,000 எக்டேர் விவசாய நிலங்களில் பணிகள் நடக்கிறது. கோட்டக்கரையாறு துணை வடிநில கோட்டம் ராமநாதபுரத்தில் உள்ளதால், ஒவ்வொரு முறையும் இத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கும் போது சருகணி ஆறு குறுவடிநில கோட்டத்தை புறக்கணித்து விடுகின்றனர். எனவே, இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீட்டிலாவது சருகணி ஆறு வடிநில கோட்டத்தை சேர்த்து, கால்வாய் மேம்பாட்டு பணிகளை நடத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நெல் பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு கூட்டம்

சிவகங்கை: பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு முகாம் சிவகங்கை அருகே நாலுகோட்டையில் நடந்தது. தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் நடப்பு ஆண்டு நெல் பயிருக்கு பயிர் காப்பீடு செய்வது குறித்து, சிவகங்கை அருகே சோழபுரம், திருமலை, தமறாக்கி, நாலுகோட்டை விவசாயிகளுக்கு கூட்டம் நடந்தது. ஊராட்சி ஒன்றிய தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் குருமூர்த்தி, உதவி இயக்குனர் தனபால் முன்னிலை வகித்தனர். இணை இயக்குனர் கூறுகையில்,""நெல் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தங்கள் பகுதி வி.ஏ.ஓ.,விடம் அடங்கல் சான்று பெற்று, தொடக்க விவசாய கடன் சங்கம் அல்லது தேசிய வங்கிகளில் பயிர் காப்பீடு தொகையை கட்ட வேண்டும். பயிர் கடன் பெற்ற விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.149, பெறாத விவசாயிகள் ரூ.134 கட்டவேண்டும். நடப்பு பருவத்திற்கு காப்பீடு செய்ய டிச.,15 கடைசிநாளாகும்," என்றார்.

## அருப்புக்கோட்டையில் 20 மி.மீ., மழை

விருதுநகர்: மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் நீர்நிலைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ.,): அருப்புக்கோட்டை 20, சாத்தூர் 17, சிவகாசி 9, விருதுநகர் 8, காரியாபட்டி 10.2, வெம்பக்கோட்டை 9.5, கோவிலாங்குளம் 8.6.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தொடர் மழை: சென்னை குடிநீர் ஏரிகளின் நீர் இருப்பு அதிகரிப்பு**

வடகிழக்குப் பருவமழை காரணமாக சென்னையில் உள்ள குடிநீர் ஏரிகளின் நீர் இருப்பு சற்று அதிகரித்துள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சென்னையின் குடிநீர் ஆதாரங்களான பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளிலும் கடந்த அக்டோபர் 25-ஆம் தேதி மொத்தம் 297 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது.

8 நாள்களில் 62 மில்லியன் கன அடி: இதைத் தொடர்ந்து வந்த நாள்களில் அடிக்கடி மழை பெய்ததால் ஏரிகளின் நீர் இருப்பு செவ்வாய்க்கிழமை (நவ.3) 359 மில்லியன் கன அடியாக அதிகரித்துள்ளது. புழல் ஏரி பகுதியில் செவ்வாய்க்கிழமை 20 மில்லி மீட்டர் மழையும், செம்பரம்பாக்கத்தில் 20 மி.மீட்டர் மழையும் பெய்தது. பூண்டி ஏரியில் தற்போது 71 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது (கொள்ளளவு 3232 மில்லியன் கனஅடி). ஏரிக்கு விநாடிக்கு 18 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதேபோல் புழல் ஏரியில் 32 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு

உள்ளது(கொள்ளளவு 3,330 கனஅடி). ஏரிக்கு விநாடிக்கு 24 கனஅடி தண்ணீர் ஏரிக்கு வருகிறது.
செம்பரம்பாக்கம் ஏரியில் 245 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது (கொள்ளளவு 3645). சோழவரம் ஏரியில் 11 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.(கொள்ளளவு 881 மி.கனஅடி)

**தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

அரபிக் கடலில் நிலை கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளதால், தமிழக பெரும்பாலான மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த ஒரு வாரமாக பல்வேறு மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், வங்கக் கடலில் உருவான மேலடுக்கு சுழற்சியால் கடந்த சில நாள்களாக தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழை பெய்தது.
இந்த நிலையில் குமரிக் கடலில் நிலை கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி, அரபிக் கடலில் லட்சத் தீவுப் பகுதிக்கு நகர்ந்தது. மேலும் வடக்கு நோக்கி நகர்ந்து தற்போது காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது.
இந்தத் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஒரிரு மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையை பொருத்தவரையில், வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். நகரின் ஒரு சில பகுதிகளில், இடியுடன் கூடிய மழை பெய்யும். இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக நாகபட்டினத்தில் 44 மி.மீ, மதுரை, தூத்துக்குடி 16 மி.மீ வேலூர் 11 மி.மீ. திருச்சியில் 10 மிமீ, மழை பதிவானது.

**தேயிலைக்கு உரிய விலை வழங்க காந்திய மக்கள் இயக்கம் வலியுறுத்தல்**

தேயிலைக்கு உரிய விலை வழங்க வேண்டும் என காந்திய மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர், தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநருக்கு நீலகிரி மாவட்ட காந்திய மக்கள் இயக்கத் தலைவர் வள்ளிரமேஷ் அனுப்பியுள்ள மனு:

மத்திய அரசு சார்பில் தேயிலைக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட அளவில் விலைக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. அதில் தொழிற்சாலைகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே ஒரே மாதிரியான பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை. தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், எஸ்டேட் தொழிற்சாலைகள் என தரம் பிரித்து தலா 2 உறுப்பினர்கள் என 4 பிரதிநிதிகளை நியமித்த நிலையில் விவசாயிகள் தரப்பில் இருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2013-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி போடப்பட்ட உத்தரவின்படி தொழிற்சாலைகளுக்கு கிடைக்கும் லாபத் தொகையை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்வது குறித்து இன்று வரை தெளிவுபடுத்தவில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலைகள் சார்பில் ஏல மையங்களுக்கு அனுப்பும் தேயிலைத் தூளை மட்டுமே கணக்கில் கொண்டு விலை நிர்ணயம் செய்கிறது. ஆனால், தொழிற்சாலைகள் தனியாக விற்பனை செய்யும் தேயிலைத் தூளைக் கணக்கில் எடுக்க மறுப்பது நியாமற்ற செயலாகும். தொழிற்சாலை, இடைத்தரகர்கள், தேயிலை சேமிப்புக் கிட்டங்கியின் உரிமையாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைக்கு உரிய கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் விவசாயிகளுக்கு சேர வேண்டிய தொகைக்கு எவ்வித கால நிர்ணயமும் செய்யப்படவில்லை. இதுமட்டுமல்லாமல் தனியார் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூள்களில் 70 சதவீதம் ஏல மையங்கள் மூலமாகவும் 30 சதவீதம் தன்னிச்சையாகவும் விற்பனை செய்து கொள்ளலாம் என மத்திய வர்த்தகத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தற்போது 50 சதவீதம்

தேயிலைத் தூள் மட்டும் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யலாம் என சட்ட திருத்தம் கொண்டு வந்துள்ளதால் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு மட்டும் சாதகமாக ஒரு தலைபட்சமாக நிலையை மத்திய அரசு எடுத்துள்ளது. இதன் மூலம் தேயிலை விவசாயிகளை மத்திய அரசு வஞ்சித்துள்ளது. தேயிலை விவசாயிகளுக்கான நியாயமான விலையை வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழை சாகுபடி அதிகரிப்பு: ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் நஷ்டம்

கோவை மாவட்டம் மற்றும் கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் அதிக அளவில் வாழை சாகுபடி நடைபெற்று வரும் நிலையில், ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை நஷ்டமடைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர், மதுக்கரை, அன்னூர், தடாகம், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 1,500 ஏக்கருக்கு மேல் நேந்திரம், கதளி, ரோபஸ்ட்டா, கற்பூரவள்ளி உள்ளிட்ட ரகங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.

இதில் சாடிவயல் பகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்து மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்யப்பட்ட வாழைப் பழங்களின் செவ்வாய்க்கிழமை விலை நிலவரம்:

முதல் ரக நேந்திரன் வாழை விலை கிலோ ரூ. 17-க்கும், கதளி ரூ. 24-க்கும், ரோபஸ்டா ரூ. 6-க்கும் விற்பனையானது. இரண்டாம் தர நேந்திரன் ரூ. 12, கதளி 19, ரோபஸ்டா ரூ. 3-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

÷கடந்த ஆறு மாதமாக கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் உள்ள வறுவல் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு வந்த வாழைக் காய்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஏனெனில் கேரளம் மற்றும் கர்நாடகத்தில் வாழைக் காய் உற்பத்தி அதிகரித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளதும் விலை குறைவுக்கு காரணம் என விவசாயிகள் தெரிவித்தனர். இதனிடையே, கடந்த சில நாள்களாக பெய்து வரும் கன மழையாலும், பலத்த காற்றாலும் வாழை மரங்கள் சேதமடைகின்றன. மேலும், நோய் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## 24 மணி நேர மழை வெள்ள நிவாரண முகாம் ஏற்படுத்தப்படும்: மாநகராட்சி மேயர் ப.ராஜ்குமார்

கோவை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் 24 மணி நேர மழை வெள்ள நிவாரண முகாம் ஏற்படுத்தப்படும் என மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கோவை மாநகராட்சி அலுவலகத்தில் பருவ மழையொட்டி செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, மேயர் ப.ராஜ்குமார் தலைமை வகித்தார். மாநகராட்சி ஆணையர் டாக்டர் விஜயகார்த்திகேயன் முன்னிலை வகித்தார்.

இதில் மேயர் ப.ராஜ்குமார் பேசியது:

பருவ மழையொட்டி, மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் மழை வெள்ள நிவாரண மையங்களையும், கட்டுப்பாட்டு அறையும் ஏற்படுத்திட வேண்டும்.

இதற்கான தொலைப்பேசி எண்களை அனைவரும் அறியும் வகையில் விளம்பர செய்ய வேண்டும். மேலும் நடமாடும் குழு ஏற்படுத்தி தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும். நோய் பரவாமலிருக்க தேவையான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மழைநீர் செல்ல வசதியாக கால்வாயில் உள்ள அடைப்புகளை தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும். மழைக் காலங்களில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தகவல்களை பரிமாற்றம் செய்திட வேண்டும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் மரம் அறுக்கும் கருவியை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மேலும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கினால் ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு ஜெனரேட்டர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அந்தந்த வார்டுகளில் தற்போது உள்ள பிரச்னைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு காண உரிய வழிமுறைகளை கண்டறிய வேண்டும். எனவே அனைத்து அலுவலர்களும் எவ்வித பிரச்னைகளும் ஏற்படாத வகையில் கண்காணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றார்.

கட்டுப்பாட்டு அறை எண்:

இதில் பருவ மழை குறித்து 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கவும், பெறவும் வகையில் தொலைபேசி எண்கள் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதான அலுவலகம்- 0422 2302323, மேற்கு மண்டலம் - 0422 2551700, வடக்கு மண்டலம்- 0422 2243133, தெற்கு மண்டலம் - 0422 2252482, கிழக்கு மண்டலம் - 0422 2577056, மத்திய மண்டலம் - 0422 2215618 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

இக்கூட்டத்தில் துணை ஆணையர் காந்திமதி, மாநகராட்சி பொறியாளர்கள் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**சின்ன வெங்காயம் விற்பனை தீவிரம்**

சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிப்பால் இருப்பு வைத்துள்ள சின்ன வெங்காயத்தை விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து சின்ன வெங்காயத்தின் வரத்து அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த ஆகஸ்ட் மாதம் அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இதனால், ஒரு கிலோ ரூ.17-க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. நல்ல விலையை எதிர்பார்த்து பெரும்பாலான விவசாயிகள் சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்தனர். அவ்வகையில் விவசாயிகள், வியாபாரிகளிடம் சுமார் 20 ஆயிரம் டன் வரை சின்ன வெங்காயம் இருப்பு இருந்தது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்து வருகிறது. இருப்பு வைத்த சின்ன வெங்காயத்துக்கு ரூ.38 வரையிலும் தற்போது அறுவடை செய்யப்படும் வெங்காயத்துக்கு ரூ.24 வரையும் விலை கிடைக்கிறது. இதனால், இருப்பு வைத்திருந்த வெங்காயத்தை விவசாயிகள் விற்கத் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "அறுவடையின்போது விலை குறைந்ததால் நஷ்டத்தை தவிர்க்க 3 மாதமாக வெங்காயத்தை இருப்பு வைத்திருந்தோம். தற்போது சின்ன வெங்காயம் கிலோ ரூ.38-க்கு விற்கப்படுகிறது. மழை தொடங்கியுள்ளதால் இருப்பு வைத்துள்ள வெங்காயம் அழுகிவிடும் என்பதால் தற்போது விற்பனை செய்யத் தொடங்கியுள்ளோம்' என்றனர்.

## பருப்பு பதுக்கல்: திருப்பூரில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆய்வு

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள தனியார் கிடங்கில் துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

பருப்பு விலை உயர்வையடுத்து, பருப்பு வகைகளை இருப்பு வைத்திருக்க கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு பகுதிகளில் பருப்பு வகைகள் இருப்பு வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், திருப்பூர் அவிநாசி சாலை குமார் நகர், காந்தி நகர், பெரியார் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் மொத்த விற்பனைக் கிடங்குகளில் பருப்பு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என மாவட்ட வருவாய் அலுவலர் ச.பிரசன்ன ராமசாமி தலைமையிலான அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இதில், தனியார் மொத்த விற்பனைக் கிடங்குகளில் அனைத்து வகை பருப்புகளும் 2,500 குவிண்டால் வரை இருப்பு வைத்திருக்கலாம். ஆனால், அதற்கும் அதிகமான அளவில் இருப்பு வைத்திருக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டது.

ஆய்வில் மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வன், திருப்பூர் வடக்கு குடிமைப் பொருள் தனி வட்டாட்சியர் தங்கவேலு, தனி வருவாய் அலுவலர் ரமேஷ், உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு ஆய்வாளர் சண்முகலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிலையில், காந்தி நகரில் உள்ள ஒரு கிடங்கில் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளை மாவட்ட வருவாய் அலுவலர் ச.பிரசன்ன ராமசாமி பறிமுதல் செய்தார்.

**பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை: அமைச்சர் ரமாநாத்ராய்**

சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பிளாஸ்டிக் பொருள்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று, கர்நாடக வனத் துறை அமைச்சர் ரமாநாத்ராய் தெரிவித்தார்.

இதுகுறித்து செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பெங்களூரில் பிளாஸ்டிக் உற்பத்திக்கு அரசு தடை விதித்துள்ளது. ஆனால், அதனை பயன்படுத்தத் தடை விதிக்கப்படவில்லை. சுற்றுச்சூழலைப் பாதிக்கும் 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக்கை பயன்படுத்த அரசு தடை விதிக்க திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்த அறிவிப்பு

அக். 28-ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நவ. 28-ஆம் தேதிக்குள் பொதுமக்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். அதன் பிறகு 40 மைக்ரானுக்கும் குறைவான பிளாஸ்டிக்கை பயன்படுத்த முழுவதுமாக தடை விதிக்கப்படும்.

இதையடுத்து, யாரேனும் தடை விதிக்கப்பட்ட பிளாஸ்டிக்கை பயன்படுத்தினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிளாஸ்டிக் பொருள்களால் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்படுகிறது. எனவே, 40 மைக்ரானுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக்கை முழுமையாக தடை செய்ய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். மாநகராட்சியில் ஆணையரும், மற்ற பகுதிகளில் ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளும் பிளாஸ்டிக் தடையைக்

கண்காணிப்பார்கள்.

மேலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பாதுகாப்பு குறித்து மாநில அரசு வழங்கியுள்ள கஸ்தூரிரங்கன் அறிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. வரையறுக்கப்பட்ட வனப் பகுதியில் மக்களுக்குத் தேவையான மருத்துவமனை உள்ளிட்ட அடிப்படை கட்டுமான வசதிகள் இருப்பது அவசியம். எனவே, இதை மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

பள்ளி மாணவர்களை வனப் பகுதிக்கு அழைத்துச் சென்று, வனப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுப் போட்டிகள் நடத்தப்படும். முதல் கட்டமாக கதக், பெலகாவி மாவட்டங்களில் இதுபோன்ற போட்டிகள் நடத்தப்படும் என்றார்.

தினகரன்

உலர் பழ கிப்ட் விற்பனையில் புது உத்தி



புதுடெல்லி: பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் உலர் பழங்கள் அடங்கிய விதவிதமான பேக்கிங்குகள் பரிசு அளிப்பதற்காக விற்கப்படுகின்றன. இவற்றில் முந்திரி, பாதாம் போன்றவை பிரதானமாக இருக்கும். ஆனால், இவற்றில் உலர் திராட்சை, அக்ரூட் தவிர மற்றவை விலை கடந்த ஓராண்டாக 15 முதல் 20% அதிகரித்து விட்டது. இதுபோல், முந்திரி விலை 20-25%, பாதாம் 15% அதிகரித்து விட்டன. இதனால், பெரிய நிறுவனங்கள் கூட உலர் பழ கிப்ட் பேக்கிங்குகளை இந்த பண்டிகை சீசனில் அதிகம் ஆர்டர் செய்யவில்லை. எனவே, விற்பனை அதிகரிக்கும் புதிய உத்தியாக விலை குறைந்த உலர் பழ பேங்கிங்குகளை விற்பனை செய்வதாக உலர் பழ விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**பருப்பு விலை மேலும் குறையும் மத்திய அரசு உறுதி**



புதுடெல்லி: பருப்பு விலை குறித்து ஆராய மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி தலைமையில் உயர்மட்ட கூட்டம் நடந்தது. இதில், பதுக்கல்காரர்கள் மீது தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக பருப்பு வகைகள் விலை கிலோவுக்கு சராசரியாக 20 குறைந்துள்ளதாக

மத்திய அரசு தெரிவித்துள்ளது நாடு முழுவதும் சுமார் 1.3 லட்சம் டன் பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவை சந்தைக்கு தொடர்ந்து சப்ளை செய்யப்படும். மேலும் உள்ளூர் உற்பத்தி பருப்பு வகைகள் டிசம்பர் துவக்கத்தில் வர துவங்கும். எனவே விலை மேலும் சரிவடையும் என ஜெட்லி கூறியுள்ளார்.

## மழையால் உயிரிழந்தோர் குடும்பங்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு : முதல்வர் ஜெ. அறிவிப்பு




சென்னை: மழையால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். முதல்வர் ஜெயலலிதா இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மழையால் முழுவதும் சேதமுற்ற நிரந்தர வீடு ஒன்றுக்கு ரூ.95,100 இழப்பீட்டு தொகை வழங்க்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும் முழுவதும் சேதமுற்ற குடிசை வீடு ஒன்றுக்கு ரூ.5000 இழப்பீட்டு தொகையும், ஒரு பகுதி சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ.4,100 இழப்பீடும் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். இழப்பீட்டு தொகையுடன் 10 கிலோ அரிசி, உடை, 1 லிட்டர் மண்ணெண்ணெய்

வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

## விவசாயிகளுக்கு இழப்பீடு:

மழையால் பாதிக்கப்படும் நெல், நீர்ப்பாசனம் பெறும் நெற்பயிர்களுக்கு இழப்பீடு தர ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார். பயிருக்கு ஏற்ப ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.7,140 முதல் ரூ.18 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளார். மழையால் விவசாயிகளின் கால்நடைகள் உயிரிழந்தாலும் இழப்பீடு தர ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். பசு, எருமை மாட்டுக்கு ரூ.30,000, ஆடு, பன்றிக்கு ரூ.3000, கோழிக்கு ரூ.100 இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்துள்ளார். மழையால் சேதமடையும் படகுகளை பழுது பார்க்கவும் உதவி தொகை அறிவித்துள்ளார்.

**கடலோர மாவட்டங்களில் கனமழை**




சென்னை : தென் மேற்கு வங்கக் கடலின் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சியால் தமிழகத்தில் ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று திருமயத்தில் 80 மிமீ மழை பெய்துள்ளது. மயிலாடி, மேலூர், ராமேஸ்வரம், நாகப்பட்டினம், ராதாபுரம், பவானிசாகர், சத்தியமங்கலம், திருவாரூர், சேத்தியாதோப்பு, திருச்செந்தூர், ஆத்தூர் 30 மிமீ, சிவகங்கை, கோபிசெட்டிப் பாளையம்,

அருப்புக்கோட்டை, ஸ்ரீமுஷ்ணம், சாத்தனூர் அணை, சாத்தூர், மதுரை விமான நிலையம், தூத்துக்குடி, கன்னியாகுமரி 20 மிமீ, மேட்டூர், மயிலாடுதுறை, குழித்துறை, வேலூர், திருச்சி, சிவகாசி, மன்னார்குடி, விருதுநகர், விளாத்திக்குளம் 10 மிமீ மழை பெய்துள்ளது.

வளி மண்டல மேல் அடுக்கில் உருவான காற்று சுழற்சி தமிழக கடலோரத்தை ஒட்டிய தென் மேற்கு வங்கக் கடல்பகுதியில் நிலை கொண்டுள்ளதால் இன்றும் தமிழகம் புதுச்சேரியில் மழை நீடிக்கும். குறிப்பாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்.

**முந்திரி, பாதாம் பருப்புகளுக்கு பதிலாக வெட்டுக்கிளி, புழுக்களை கொண்டு தயாரிக்கப்படும் பூச்சி சாக்லெட்**




மிலன்: இத்தாலியில் உள்ள உணவகம் ஒன்று பூச்சிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட சாக்லெட்டுகளை விற்பனை செய்து வருகிறது.

அந்நாட்டில் மிலன் நகரில் உள்ள அந்த உணவகம் ஆரோக்கியமான உணவு வகைகளை வழங்கும் எண்ணத்தோடு அது தொடர்பான ஆராய்ச்சியில் இறங்கியது. அதன் முடிவில் காய்கறிகளை விட பூச்சிகளில் அதிகப்படியான புரோட்டின் சத்து இருப்பதை அந்த உணவகம் கண்டறிந்துள்ளது.

பூச்சிகளை மக்கள் அறுவறுப்படையாமல் உண்ண வேண்டும் என்பதற்காக சாக்லெட்டுகளில் முந்திரி, பிஸ்தா, பாதாம் பருப்புகளுக்கு பதிலாக எண்ணெயில் பொறித்த வெட்டுக்கிளி, புழு போன்றவற்றை கலந்து வழங்குகிறது. முதலில் இவ்வகை சாக்லெட்டுகளை சாப்பிட யோசித்த மக்கள் தற்போது அதனை விரும்பி உண்பதாக அந்த உணவகம் கூறுகிறது.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 14,000 கனஅடியாக உயர்வு



பென்னாகரம் : கர்நாடகா மாநிலம், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருவதால், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி வீதம் நீர் வந்து கொண்டிருந்து. இது படிப்படியாக உயர்ந்து, நேற்று காலை 11 மணிக்கு 14,000 கனஅடியானது.

அதேநேரம் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 6,768 கனஅடியாக

இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 5,386 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கால்வாய் பாசனத்திற்கு நீர்திறப்பு நிறுத்தப்பட்டது. நீர்திறப்பை விட, வரத்து அதிகளவில் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 63.07 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 63.54 அடியாக உயர்ந்தது.

## வையம்பட்டியில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்

மணப்பாறை, : வையம்பட்டியில் கடவூர் இன்ப சேவாசங்கம் சார்பில் பிராஸ் இந்தியா திட்டம் குறித்த விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம் நடந்தது. மறுசுழற்சி வேளாண்மை மற்றும் சமூகங்களை கட்டமைத்தல் என்ற முக்கியநோக்குடன் விவசாயத்தை மேம்படுத்த சுவீடன் நாட்டில் பிராஸ் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தை இந்தியாவில் கடவூர் இன்ப சேவாசங்கம் செயல்படுத்தி வருகிறது. இதில் இயற்கை வேளாண்மையில் மண்வளத்தை மேம்படுத்தும் பல்வேறு விளைவுகளை கட்டமைத்து பண்ணைஅளவில் உயிரினப்பயிர்களை பாதுகாப்பது, பண்ணையில் பலவகையான கால்நடைகளை கொண்டுவருவது, பயிர் சுழற்சியில் பயறுவகை பயிர்களை பயன்படுத்துவது போன்ற பிராஸ் திட்டத்தின் கொள்கைகள் குறித்து விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டது. வையம்பட்டி அகிம்சா இயக்குனர் இன்னாசி தலைமை வகித்தார். ஆசிரியர் விக்டர் வரவேற்றார். பிராஸ் இந்தியா திட்டத்தின் செயலாளர் சுரேஷ்கண்ணா, டாக்டர் கருப்புராஜ், சித்தமருத்துவர் பரமேஸ்வரி, முன்னோடி இயற்கை விவசாயி ஆசிரியர் முருகேசன் மற்றும் சுவீடன் நாட்டு மாணவர்கள், விவசாயிகள், மகளிர் குழுவினர் கலந்து கொண்டனர். திட்டஒருங்கிணைப்பாளர் மருதையப்பன் நன்றிகூறினார்.

## பேராவூரணியில் 39 மி.மீட்டர் மழை

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் கடந்த 5 நாட்களாக பெய்த மழை நேற்று மதியம் 4 மணி வரை மழை பெய்யவில்லை. பேராவூரணியில் 39

மி.மீட்டர் மழை பதிவானது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 5 நாட்களாக விட்டு விட்டு மழை பெய்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ஆனால் நேற்று காலை முதல் மாலை 4 மணி வரை மழை பெய்யவில்லை. இதனால் பொதுமக்கள் நிம்மதி அடைந்தனர். மாவட்டத்தில் நேற்று அதிகாலை வரை பதிவான மழையளவு (மி.மீ): அதிராம்பட்டினம் 5.60, கும்பகோணம் 16, பாபநாசம் 14, தஞ்சை 17, திருவையாறு 2, வல்லம் 6.50, கல்லணை 5.40, அய்யம்பேட்டை 16, திருவிடைமருதூர் 3, மஞ்சலாறு 1, நெய்வாசல் தென்பாதி 9.20, பூதலூர் 11.20, வெட்டிக்காடு 18, ஈச்சன்விடுதி 16, ஒரத்தநாடு 7.40, பட்டுக்கோட்டை 10, மதுக்கூர் 8.80, பேராவூரணி 39, குருங்குளம் 2 என்று மழையளவு பதிவாகியுள்ளது.

## 1 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு தீபாவளிக்குள் தண்ணீர் திறப்பு? விவசாயிகள் எதிர்பார்ப்பு

மதுரை, : அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் தீபாவளிக்குள் பெரியாறு ஒருபோக ஆயக்கட்டு 1 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாசனத்துக்கு 48 நாள் தாமதம் ஏற்பட்டாலும் தண்ணீர் திறக்கப்படும் சூழல் எழுந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை நீடித்து அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி பெரியாறு அணை நீர்மட்டம் 125 அடியை தாண்டியது. வைகை அணை 49 அடியை எட்டியது. மதுரை மாவட்டத்தில் பெரியாறு அணை பாசன ஒருபோக ஆயக்கட்டு மேலூர் பகுதி மற்றும் திருமங்கலம் கால்வாய் பகுதிகளில் மொத்தம் 1 லட்சம் ஏக்கர் உள்ளது. இவற்றின் பாசனத்துக்கு செப்டம்பர் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். 48 நாட்கள் கடந்தும் இன்னும் ஒருபோக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. 1 லட்சம் ஏக்கர் ஒரு போக

பாசனத்திற்கு தண்ணீர் திறக்க பெரியாறு அணையில் 6 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் இருக்க வேண்டும். தற்போது 5 ஆயிரத்து 300 மில்லியன் கன அடி உள்ளது. பெரியாறு அணைக்கு 4,410 கன அடி நீரும், வைகைக்கு 2,037 கன அடி நீரும் வந்து கொண்டு இருக்கிறது. அணை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால் ஓரிரு நாளில் 6 ஆயிரம் மில்லியன் கன அடியை தாண்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஒரு போக பாசனத்துக்கு தீபாவளிக்கு முன் தண்ணீர் திறக்க வாய்ப்பு கனிந்துள்ளது என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். எப்போது திறக்கப்படும்? என விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## பிற மாவட்ட கூட்டுறவு பேரங்காடிகளிலும் மலிவு விலை பருப்பு தீபாவளிக்கு முன் கிடைக்குமா? - சென்னையில் இன்று கூட்டுறவுத் துறை ஆய்வுக்கூட்டம்

தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு பேரங்காடிகளிலும் தீபாவளிக்கு முன் மலிவு விலை பருப்பு விற்பனை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் உள்ளனர்.

பருப்பு வகைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக துவரம் பருப்பு விலை நேற்று திருநெல்வேலியில் ஒரு கிலோ ரூ.170 ஆக இருந்தது. தீபாவளி பண்டிகையை மக்கள் கொண்டாடத் தயாராகிவரும் நிலையில், பருப்பு வகைகளுக்காக பெருந்தொகையை செலவிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இதுபோல் மளிகை பொருட்களின் விலையும், உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்திருப்பது அவர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது.

இந்நிலையில் பொதுமக்களுக்கு மலிவு விலையில் பருப்பு வழங்கும் திட்டத்தை கடந்த சில நாட்களுக்குமுன் தமிழக அரசு அறிவித்தது. முதல்கட்டமாக சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில் கிலோ ரூ.110-க்கு இவற்றை மக்கள் வாங்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்நான்கு பெருநகர கூட்டுறவு அங்காடிகளிலும் மலிவு விலை பருப்பு விற்பனை மும்முரமாக நடைபெறுகிறது. மக்கள் போட்டிபோட்டு வாங்கிச் செல்கின்றனர்.

ஆனால், தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் மலிவு விலை பருப்பு விற்பனை நடைபெறாதது மக்களை ஏமாற்றம் அடைய வைத்திருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு அங்காடிகளிலும் மலிவு விலையில் பருப்பு விற்பனை செய்யப்படுமா என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து கூட்டுறவுத்துறை வட்டாரத்தில் விசாரித்தபோது, `தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் மட்டத்திலான அதிகாரிகள் ஆய்வுக்கூட்டம் சென்னையில் இன்று நடைபெறுகிறது. அதில் 2-ம் கட்டமாக மற்ற மாவட்டங்களுக்கும் மலிவு விலை பருப்பு விற்பனைத் திட்டம் அமலாகுமா என்பது தெரியவரும்' என்று தெரிவித்தனர்.

## வடகிழக்கு பருவமழை: சென்னையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்- மாநகராட்சி ஆணையர் தகவல்

வடகிழக்கு பருவமழையை எதிர் கொள்வதற்கான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக சென்னை மாநக ராட்சி ஆணையர் விக்ரம் கபூர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் நேற்று அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னையில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது 378 மிமீ மழை பெய்தது. இந்த ஆண்டு இதுவரை 186.9 மிமீ மழை பெய்துள்ளது. 196 இடங்களில் தேங் கிய மழைநீர், 83 இடங்களில் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள் ளன. சென்னையில் முதல் முறை யாக 194 பேருந்து சாலைகள் சேம்பர் அமைப்புடன் அமைக்கப்பட் டுள்ளன. 471 பேருந்து சாலைகள், 33,374 உட்புற சாலைகளில் இருந்த சிறு பள்ளங்கள் ஒட்டும் பணிகள், குப்பைகள் அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வரு கின்றன. பேருந்து சாலைகளில் மழைநீர் தேங்குவது குறைக்கப் பட்டுள்ளன.

1,860 கிமீ நீளமுள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சிறப்புமிக்க இயந்திரங்கள் மூலமாக தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 6,200 மெட்ரிக்டன் தூர் வாரப்பட்டுள்ளன. 30 நீர்வழி தடங்களில் இயந்திரங்கள் மூலம் ஆகாய தாமரைகளை அகற்றும் பணி 110 கிமீ தூரத்துக்கு ரூ.13.4 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. மழைநீரை அகற்ற 160 பம்பு செட்டுகள் தயார் நிலையில் உள்ளன. 4 உணவு சமைக்கும் இடங்கள், நிவாரண உதவிகள் வழங்கும் மையங்கள் தயார் நிலையில் இருக்கின்றன.

சென்னையில் உள்ள 15 மண்டலங்களிலும் ஐஏஎஸ் அதிகாரிகள் தலைமையில் சிறப்பு குழுக்கள் அமைக்கப் பட்டு தொடர்ந்து கண்காணிக் கப்படுகின்றன.16 மாநகராட்சி சுரங்கப்பாதைகள், 6 நெடுஞ்சாலை சுரங்கப்பாதைகளில் நீர் தேங்காமல் இருக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடையாறு மற்றும் கூவம் வடிநிலைப் பகுதிகளில் ரூ.1,107 கோடி செலவில் வடிகால்வாய் அமைப்பு பணிகள் தொடங்கப்பட உள்ளன. 4,083 உட்புறச் சாலைகளில் கான்கிரீட் மற்றும் தார் சாலை அமைக்கும் பணி ரூ.400 கோடி செலவில் தொடங்கப்படும்.

வடகிழக்கு பருவமழை முடிந்த பிறகு புதிதாக சாலைகள் போடும் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை: பள்ளி–கல்லூரிகளுக்கு விடுமுறை



நெல்லை, நவ.4–

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் நெல்லை–தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

நெல்லையில் நேற்று பகலில் வெயில் அடித்தது. மாலையில் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நள்ளிரவில் திடீரென

பெய்ய தொடங்கிய மழை இன்று காலை வரை நீடித்தது. விடிய விடிய பலத்த மழை பெய்ததால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.
பாளை சேவியர் காலனி பகுதியில் ஏராளமான வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது. மேலும் பல இடங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கியது. நெல்லை டவுனில் உள்ள நயினார்குளம் நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் அதிகபட்சமாக பாளையில் 60 மில்லி மீட்டர் மழையும், நாங்குநேரியில் 59 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. தொடர்ந்து மாவட்டம் முழுவதும் மிதமான மழை பெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக நெல்லை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளித்து கலெக்டர் கருணாகரன் உத்தரவிட்டார். பல்கலைக்கழகத் தேர்வுகள் வழக்கம் போல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது
தொடர் மழை காரணமாக பாபநாசம் அணை உள்ளிட்ட அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 83.5 அடியாக இருந்தது. இன்று காலை 84.25 அடியாக உயர்ந்துள்ளது. நேற்று 97.96 அடியாக இருந்த சேர்வலாறு அணை நீர்மட்டம் இன்று காலை 98.72 அடியாக உயர்ந்தது. இதே போல் மணிமுத்தாறு அணை நீர்மட்டம் இன்று காலை 64.90 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 72.50 அடியாகவும், ராமநதி அணை 71.75 அடியாகவும், கருப்பாநதி அணை 70.21 அடியாகவும், அடவிநயினார் அணை 103 அடியாகவும் உள்ளது. குண்டாறு அணை ஏற்கனவே நிரம்பி வழிகிறது.

மாவட்டத்தில் பெய்த மழை அளவு விபரம் மில்லி மீட்டரில் வருமாறு:–
பாளை– 60, நாங்குநேரி– 59, ஆலங்குளம்– 48.84, சேரன் மகாதேவி– 40, நெல்லை– 36, ராதாபுரம்– 24, அம்பை– 23.2, சங்கரன்கோவில்– 20,

மணிமுத்தாறு– 18.2, ஆய்க்குடி– 15.2, வீ.கே.புதூர்– 15.2, செங்கோட்டை– 6, சிவகிரி– 3.1, பாபநாசம்– 3, தென்காசி– 2.

தூத்துக்குடி மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இன்று அதிகாலை 3 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை சுமார் அரைமணிநேரம் பெய்தது. ஏற்கனவே பெய்த மழையால் முள்ளக்காடு பகுதியில் உள்ள உப்பளங்கள் வெள்ள நீரில் மூழ்கி கிடக்கிறது. இதனால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்து தவித்து வருகின்றனர்.

சாயர்புரம் பகுதியில் பெய்த மழையால் மீன் கடை பஜார் பகுதியில் உள்ள வீடுகளை மழை நீர் சூழ்ந்து கொண்டது. மழை நீரை அப்புறப்படுத்த அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளாத்திகுளம் அருகே உள்ள ரெட்டியப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிடத்தின் மேற்கூரை நேற்று திடீரென இடிந்து விழுந்தது. இதில் 5 மாணவ– மாணவிகள் காயம் அடைந்தனர். அவர்கள் நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

## பலத்த மழை எதிரொலி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர், நவ. 4–

தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர் பிடிப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதுபோல் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் காவிரி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து வருகிறது.

தமிழக – கர்நாடக எல்லைப்பகுதியான ஒகேனக்கல் பிலிகுண்டுவில் நேற்று காலை 11 ஆயிரம் கன அடி வந்தது. பின்னர் இது படிப்படியாக அதிகரித்து இரவு 15 ஆயிரம் கன அடிதண்ணீர் வந்தது. இன்று காலை இது 16 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி ஒகேனக்கல்லில் பரிசல் சவாரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் ஒகேனக்கல் மெயின் அருவி, ஐந்து அருவி, சினிபால்ஸ் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. ஒகேனக்கல் மெயின் அருவிக்கு செல்லும் நுழைவுவாயில் பகுதி தற்போது போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கொண்டுள்ளனர். மேலும் வருவாய் துறையினரும், தீயணைப்பு துறையினரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பிலிகுண்டுவில் பொதுப் பணித்துறை அதிகாரிகள் காவிரி ஆற்றில் வரும் நீரின் அளவை கண்காணித்தும் வருகிறார்கள்

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர தொடங்கி உள்ளது. நேற்று காலை அணைக்கு 5 ஆயிரத்து 450 கன அடி தண்ணீர் வந்தது. இன்று காலை இது 13 ஆயிரத்து 956 கன அடியாக அதிகரித்தது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 63.54 அடியாக இருந்தது.

இன்று காலை இது 64.19 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்திற்காக 1300 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீர்வரத்தை விட நீர் திறப்பு குறைவாக உள்ளதால், நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கான சூழ்நிலை உருவாகி உள்ளது.

**கன மழை காரணமாக நெல்லை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை**



திருநெல்வேலி,

அதிகாலை முதல் கனமழை பெய்து வருவதால் நெல்லை மாவட்டத்தில் இயங்கி வரும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், இன்று அதிகாலை முதலே நெல்லை மாவட்டத்தில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதனால், இன்று நெல்லை மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்படுவதாக நெல்லை மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்; வானிலை மையம் அறிவிப்பு**



சென்னை,

மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் இன்று (புதன்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

உள் மாவட்டங்களில்மழை பெய்யும்

நேற்று முன்தினம் கர்நாடகத்தையொட்டிய அரபிக்கடலில் நிலவிய மேலடுக்கு சுழற்சி அதே இடத்தில் நீடிக்கிறது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்து உள்ளது. அதிக பட்ச மழையாக புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் 8 செ.மீ. மழை பெய்துள்ளது.

மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில், தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் அநேக இடங்களிலும், கடலோர மாவட்டங்களில்

சில இடங்களிலும் மழை பெய்யும். உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும்.

புயல் கரையை கடந்தது

அரபிக்கடலில் உருவான சபேலா புயல் நேற்று காலை 6-30 மணி முதல் காலை 7-30 மணிவரை ஏமன் நாட்டில் ரியா நகர் அருகே தென்கிழக்கு கடற்கரை பகுதியில் கரையை கடந்துள்ளது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

மழை அளவு

திருமயம் 8 செ.மீ., மைலாடி, மேலூர், ராமேசுவரம், நாகப்பட்டினம் தலா 5 செ.மீ., ராதாபுரம் 4 செ.மீ., பவானிசாகர், சத்தியமங்கலம், திருப்புவனம், சேத்தியாதோப்பு, திருச்செந்தூர், சித்தம்பட்டி, ஆத்தூர், நாங்குநேரி தலா 3 செ.மீ., நன்னிலம், மறந்தஹல்லி, நாகர்கோவில், மேட்டுப்பட்டி, மேட்டூர், மயிலாடுதுறை, பேராவூரணி, தக்கலை, குழித்துறை, பரூர், வேலூர், திருச்சி, குளச்சல், ஒகேனக்கல், தென் மதுரை,

பெண்ணாகரம், பேச்சிப்பாறை, காரைக்குடி, போடிநாயக்கனூர், அதிராம்பட்டினம், காமாட்சிபுரம், மணமேல்குடி, கடலாடி, சிவகாசி, மன்னார்குடி, கோவிலங்குளம், சாத்தான்குளம், விருதுநகர், விளாத்திக்குளம் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

புறநகரில் மழை

சென்னை புறநகர் பகுதிகளான ஆவடி, திருநின்றவூர், பட்டாபிராம், திருமுல்லைவாயல், கோவில்பதாகை, அயப்பாக்கம் பகுதிகளில் நேற்று மாலை 3 மணிக்கு தொடங்கி சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை கொட்டியது. தொடர்ந்து தூரல் பெய்தது. அம்பத்தூர் பகுதியில் மாலை 4 மணி முதல் சுமார் 30 நிமிடம் பலத்த மழை பெய்தது.

பூந்தமல்லி பகுதியில் மதியம் 2 மணிக்கு தொடங்கி சுமார் 30 நிமிடம் தூரல் போட்டது. தொடர்ந்து வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. இதேபோல ஆலந்தூர் பகுதியில் மழை இல்லாவிட்டாலும் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. திருவொற்றியூர், எண்ணூர், மணலி, செங்குன்றம், மாதவரம், புழல், கொளத்தூர் பகுதிகளில் நேற்று மாலை 4 மணிக்கு தொடங்கி சுமார் ஒரு மணி நேரம் மழை வெளுத்து வாங்கியது, சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் வாகன போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.ராயபுரம், தாம்பரம் பகுதியில் மாலையில் சாரல் மழை தூறிக் கொண்டே இருந்தது. ஸ்ரீபெரும்புதூர், படப்பை, ஒரகடம் பகுதியில் பலத்த மழை பெய்தது.

## 17,110 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஈச்சம்பாடி, கோமுகி அணைகள் இன்று திறப்பு; ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

தமிழ்நாடு முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தர்மபுரி மாவட்டம், ஈச்சம்பாடி அணையின் வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈச்சம்பாடி அணையின் வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் 4-11-2015 (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள 6,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகி அணையில் இருந்து பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோமுகி அணையில் இருந்து விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு 4-11-2015 (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 10,860 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

## கோவையில், பலத்த மழை எதிரொலி: சின்ன வெங்காயம் விலை 'கிடு கிடு' உயர்வு இருப்பு வைத்த விவசாயிகளுக்கு கூடுதல் லாபம்



கோவை, கோவையில், பலத்த மழையினால் சின்ன வெங்காயத்தின் விலை 'கிடு கிடு' வென்று உயர்ந்து வருகிறது. இதனால் இருப்பு வைத்த விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்துள்ளது.

'கிடு கிடு' உயர்வு

கோவையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் மொத்த விலை ரூ.24 வரைக்கும், சில்லறை விலை ரூ.30 முதல் ரூ.35 வரைக்கும் விற்பனை ஆனது. ஆனால் கடந்த 2 நாட்களாக ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் மொத்த விலை ரூ.45 வரைக்கும், சில்லறை விலை கிலோ ரூ.60 வரைக்கும் விற்கப்படுகிறது. தொடர் மழை காரணமாக விலை உயர்வு ஏற்பட்டு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மழை தொடர்ந்தால் மேலும் விலை உயரும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இதுகுறித்து கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள எம்.ஜி.ஆர். மார்க்கெட் மொத்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

கோவையை அடுத்த தொண்டாமுத்தூர், ஆலாந்துறை உள்பட பல்வேறு பகுதிகளில் சின்ன வெங்காயம் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த வெங்காயம் தற்போது அறுவடை செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்கி தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அந்த வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இருப்பு வைத்தவர்களுக்கு அதிக விலை

ஏனென்றால் சின்ன வெங்காயத்தை அறுவடை செய்தால் அவற்றில் அதிக ஈரப்பதம் இருப்பதால் விற்க முடியாது. அறுவடை செய்த வெங்காயத்தில் அதிக ஈரப்பதம் இருந்தால் அழுகிவிடும். இதனால் தான் வெங்காயம் அறுவடை செய்யவில்லை. புதிய வெங்காயம் விற்பனைக்கு வரவில்லை. ஆனால் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயலில் தண்ணீர் தேங்காமல் விவசாயிகள் பாதுகாத்து வருகிறார்கள்.

ஏற்கனவே அறுவடை செய்த வெங்காயத்தை தொண்டாமுத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் பட்டறை போட்டு இருப்பு வைத்துள்ளனர். அவை அனைத்தும் தற்போது விற்பனைக்கு வந்த போதிலும் தேவைக்கு ஏற்ப வரத்து இல்லாததால் சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. இதன் மூலம் வெங்காயத்தை இருப்பு வைத்திருந்த விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அறுவடை செய்த புதிய வெங்காயம் விற்பனைக்கு வந்திருந்தால் இருப்பு வைத்திருந்த விவசாயிகளுக்கு இந்த அளவுக்கு விலை கிடைத்திருக்காது. இன்னும் 20 நாட்கள் கழித்துதான் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சின்ன வெங்காயம் கோவைக்கு விற்பனைக்கு வரும். அதுவரை இந்த விலை உயர்வு தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பயறுவகை பயிர்களுக்கு உரமிட மானியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் வேளாண் உதவி இயக்குனர் தகவல்




மேட்டுப்பாளையம்,

காரமடை வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராஜஸ்ரீ செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

காரமடை வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையின் மூலமாக தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்கள் பூக்கும் தருணத்தில் டி.ஏ.பி. உரமிட 2 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டி.ஏ.பி. உரம் வாங்கிய ரசீதினை உரிய ஆவணங்களுடன் மேட்டுப்பாளையத்தில் உள்ள வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பித்து மானியம் பெற்றுக்கொள்ளலாம். .

## தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகள் கவலை



வால்பாறை,

வால்பாறையில் உள்ள தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் தற்போது அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல்

கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் 12 ஆயிரத்து 678 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை செடிகள் பயிரிடப்பட்டு உள்ளன. இந்த செடிகளை கொப்பளநோய், தேயிலை கொசு, சிவப்பு சிலந்தி பூச்சி, இலைசுருட்டு நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் தாக்குகின்றன. இந்த நோய்களில் இருந்து தேயிலை செடிகளை பாதுகாக்கவும், பூச்சிகளில் இருந்து செடிகளை பாதுகாக்கவும் வால்பாறையில் உள்ள உபாசி தேயிலை ஆராய்ச்சி மையத்தின் அறிவுரையின்படி பல்வேறு நோய்தடுப்பு முறைகளையும், பூச்சி கொல்லிகளையும் தேயிலை தோட்ட நிர்வாகங்கள் பயன்படுத்தி வருகின்றன.

இந்த ஆண்டு போதிய அளவு பருவமழை பெய்யாததால் தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் தற்போது அதிகரித்து

உள்ளது. இதனால் தேயிலை செடிகளில் எடை குறைவு ஏற்பட்டு உள்ளது. சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் காரணமாக விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு உள்ளனர். மேலும், இந்த நோய் மற்ற தேயிலை தோட்டங்களுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்து உள்ளனர்.

மருந்து தெளிப்பு

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:– வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில மாதங்களாக போதிய அளவு பருவமழை பெய்யவில்லை. இந்த நிலையில் தற்போது தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோயின் தாக்கம் அதிகரித்து உள்ளது. இதனால் தரமான தேயிலை கிடைக்க முடியாமல் சிறுவிவசாயிகள் மற்றும் எஸ்டேட் நிறுவனத்தினர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு தேயிலை கொசுக்களினால் பெரிய அளவில் நஷ்டத்தை சந்தித்து இருந்தோம். இந்த நிலையில் முன்கூட்டியே சிவப்பு சிலந்தி பூச்சி தாக்குதல் தொடங்கி உள்ளதால் நாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளோம். இதனை கட்டுப்படுத்த மிட்டிகேட் என்ற மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 7 நாட்கள் இடைவெளியில் தெளித்து வருகிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## உழவர்சந்தையில் கடந்த மாதம் ரூ.1 கோடியே 32 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை



பொள்ளாச்சி,

பொள்ளாச்சி உழவர் சந்தையில் கடந்த அக்டோபர் மாதம் ரூ.1 கோடியே 32 லட்சத்து 85 ஆயிரத்துக்கு காய்கறிகள், பழங்கள் விற்பனையாகி உள்ளன.

<u>உழவர்சந்தை</u>

பொள்ளாச்சியில் உழவர்சந்தை கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இங்கு 80 கடைகள் உள்ளன. சந்தைக்கு பொள்ளாச்சியை சுற்றி உள்ள கிராமங்கள் மற்றும் ஆனைமலை, கிணத்துக்கடவு, பெதப்பம்பட்டி, சுல்தான்பேட்டை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகள் மற்றும் பழங்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள்.

விவசாயிகள் சரக்கு வாகனங்களிலும், அரசு பஸ்களிலும் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். மேலும் இதனை தினமும் ஏராளமான பொதுமக்கள் வாங்கி செல்கிறார்கள். கடந்த அக்டோபர் மாதம் 5 லட்சத்து 66 ஆயிரத்து 325 கிலோ காய்கறி, பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இவைகள் ரூ.1 கோடியே 32 லட்சத்து 85 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. 2 ஆயிரத்து 490 விவசாயிகள் தங்களது விளைபொருட்களை உழவர்சந்தை மூலம்

விற்பனை செய்துள்ளனர். இவற்றை 94 ஆயிரத்து 384 பேர் வாங்கி சென்றுள்ளனர்.

விலை அதிகரிப்பு

கடந்த செப்டம்பர் மாதம் ரூ.1 கோடியே 14 லட்சத்து 86 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதை ஒப்பிட்டு பார்க்கும்போது அக்டோபர் மாதம் ரூ.18 லட்சத்துக்கு விற்பனை அதிகரித்து உள்ளது. இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறியதாவது:–

கடந்த மாதம் புரட்டாசி என்பதால் பெரும்பாலான மக்கள் அசைவத்தை கைவிட்டு சைவத்திற்கு மாறினர். இதன் காரணமாக இறைச்சி நுகர்வு சரிந்து காய்கறி நுகர்வு அதிகரித்தது. இதன் எதிரொலியாக காய்கறி மற்றும் பழங்களின் விலை கணிசமாக உயர்ந்தன.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கொட்டித்தீர்த்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது



தர்மபுரி நகரில் கொட்டித்தீர்த்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

வடகிழக்கு பருவமழை

தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக பருவமழை பெய்து வருகிறது. இதனால் ஆங்காங்கே உள்ள அணைகள், ஏரிகுளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இந்தநிலையில் தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக ஆங்காங்கே மிதமான மழை பெய்தது.

இந்த நிலையில் நேற்று மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே மழை பெய்தது. தர்மபுரி நகரில் காலை முதலே வானம் மேக மூட்டங்களுடன் காணப்பட்டது. மதியம் சுமார் ஒரு மணி நேரம் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

சாக்கடைநீர்

இடி,மின்னலுடன் பெய்த இந்த கனமழையால் தர்மபுரி பைபாஸ் ரோட்டில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அரசு ஆஸ்பத்திரி, பச்சியம்மன் கோவில் அருகே மழை நீரோடு சாக்கடை நீர் கலந்து சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியதால் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளானார்கள்.

தர்மபுரி நகரில் 4ரோடு, முகமது அலி கிளப்ரோடு, பென்னாகரம் ரோடு, சின்னசாமி நாயுடுதெரு, நாச்சியப்ப கவுண்டர்தெரு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாக்கடை கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டதால் கழிவுநீருடன் மழை நீர் கலந்து பெருக்கெடுத்து ஓடியது. இதனால் தீபாவளி பண்டிகைக்கு பொருட்களை வாங்க வந்த பொதுமக்கள் சாலைகளில் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண தர்மபுரி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கழிவுநீர்

சாக்கடைகளையும் தூர்வாரி சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவித்தனர்.

## விடிய—விடிய தொடரும் கனமழை: தாழ்வான இடங்களில் வெள்ளம் புகுந்தது



மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் பெய்து வரும் மழையால் தாழ்வான இடங்களில் வெள்ளம் புகுந்தது. இதில் பல வீடுகள் சேதம் அடைந்தன. கொல்லங்கோட்டில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

<u>தொடரும் மழை</u>

குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கருங்கல், குலசேகரம், திருவட்டார், குழித்துறை, களியக்காவிளை, அருமனை போன்ற பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடிய—விடிய மழை பெய்தது. நேற்று காலையிலும் மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. இதனால், ஆறு குளங்களில் நீர்வரத்து அதிகரித்தது. மலையோர பகுதியில் பெய்த மழையால் திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், ஆர்ப்பரித்து கொட்டிய வெள்ளம் சிறுவர் நீச்சல் குளத்தை மூழ்கடித்தபடி சென்றது. அருவியில் குளிக்க தொடர்ந்து தடை நீடிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் பெருஞ்சாணி அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும், குழித்துறை தாமிரபரணி

ஆறு, பரளியாறு ஆகியவற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. குழித்துறை சப்பாத்து பாலம் நிரம்பி தண்ணீர் செல்கிறது.

மேலும், ஆற்றின் கரையோர பகுதிகளில் தாழ்வான இடங்களில் குடியிருப்பு பகுதிகள், வாழைத்தோட்டம், ரப்பர் தோட்டம் போன்றவற்றில் மழை வெள்ளம் புகுந்தது. பால்வெட்டும் தொழில், கட்டிட தொழில், செங்கல்சூளை போன்ற தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் உள்ள சாலைகளில் மழை வெள்ளம் குளம்போல் தேங்கி நிற்பதால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் போக்குவரத்துக்கு மிகவும் அவதிப்படுகிறார்கள்.

மழை மேலும் நீடித்தால் பேச்சிப்பாறை அணையின் மறுகால் எந்த நேரத்திலும் திறந்து விடப்படலாம் என்ற அச்ச உணர்வு குழித்துறை தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதி மக்களிடையே உள்ளது.

வீடுகள் சேதம்

இந்த கன மழையால் விளவங்கோடு தாலுகாவில் பல வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளன. தேவிகோடு உதயமார்த்தாண்டம் பாண்டிவிளையை சேர்ந்த கனகராஜ் மனைவி ஜாய் என்பவரின் ஓட்டு வீடும், தெருவுக்கடை வயலின்கரை குளம் விளையை சேர்ந்த தாசன் என்பவரின் ஓட்டு வீடும் முழுவதும் இடிந்து சேதமடைந்துள்ளன. மேல்புறம் ஒன்றியம் கொட்டறக் கோணத்தை சேர்ந்த சிவசங்கரன் பிள்ளை என்பவரின் ஓட்டு வீடும் முழுவதும் சேதமடைந்துள்ளது.

மேலும் ஆறுதேசம் கிராமம் கோணத்துவிளையை சேர்ந்த முத்தையன், பனிச்சகோடு விஸ்வநாதன் ஆசாரி ஆகியோரின் ஓட்டு வீடுகளின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

முழுவதும் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதமும், ஒரு பகுதி பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ரூ.2 ஆயிரத்து 500 வீதம் நிவாரண உதவி வழங்கப்படும் என்று விளவங்கோடு தாசில்தார் கிறிஸ்டி தெரிவித்தார்.

கருங்கல் கருங்கல் அருகே பூட்டேற்றி பகுதியை சேர்ந்தவர் சுரேஷ் ஜெயராஜ். இவரது வீட்டின் அருகே நின்ற புளியமரம் பெயர்ந்து வீட்டின் மீது விழுந்தது. இதில் வீட்டின் ஒரு பகுதி இடிந்து சேதம் அடைந்தது. அப்போது, வீட்டில் இருந்த சுரேஷ் ஜெயராஜ் மற்றும் அவரது குடும்பத்தினர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். கருங்கல் அருகே ஒளிபாறையை சேர்ந்தவர் ராஜூ. இவரது வீட்டின் அருகே மின்னல் தாக்கியது. இதில் இவரது வீட்டில் இருந்த டி.வி., பிரிட்ஜ் போன்ற மின்சாதன பொருட்கள் சேதம் அடைந்தன. இதுபோல், பக்கத்து வீடுகளிலும் மின்சார பொருட்கள் சேதம் அடைந்தன. கொல்லங்கோடு

கடற்கரை பகுதியான கொல்லங்கோடு, இரவிபுத்தன்துறை, தூத்தூர், நீரோடி, தேங்காப்பட்டணம் போன்ற பகுதிகளில் கனமழை தொடர்ந்து பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை விடிய–விடிய தொடர்ந்தது. நேற்று பகலிலும் சிறு சிறு இடைவெளியுடன் தொடர்ந்து பெய்தது.

இதனால், கடல் நீர்மட்டம் உயர்ந்து ராட்சத அலைகள் தோன்றின. அலையின் வேகம் அதிகமாகி கரையோர மக்களை அச்சுறுத்தி வருகின்றன. இதனால், கரையோர பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக உறவினர் வீடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

அதிகாலையில் மழை பெய்ததால் பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால், மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டு சந்தையில் மீன்வரத்து குறைந்தது. எனவே, மீன்விலை உயரம் அபாயம் ஏற்பட்டுள்ளது. குளச்சல் பகுதியில் கட்டுமரங்களில் செல்லும் பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

## ஈரப்பதம் 11 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தல்




கோழித் தீவனத்தில் ஈரப்பதம் 11 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அடுத்த 3 நாட்கள் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 9 மி.மீட்டரும், நாளை 5 மி.மீட்டரும், நாளை மறுநாள் 8 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ. வேகத்தில் கிழக்கு திசையில் இருந்து வீசும்.

வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக இன்று 87.8 டிகிரியாகவும், நாளை மற்றும் நாளை மறுநாள் 89.6 டிகிரியாகவும் இருக்கும். குறைந்தபட்சமாக 75.2 டிகிரியாக இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 84, 80, 80 சதவீதமாகவும்,

குறைந்தபட்சமாக 60, 58, 58 சதவீதமாகவும் இருக்கும்.

பரவலாக மழை

அடுத்த 3 நாட்களுக்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சற்றே பரவலான மழை எதிர்பார்க்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழையின் தாக்கம் உள் மாவட்டங்களிலும் பரவலாக காணப்படுகிறது. இந்த மழையின் காரணமாக வெப்ப அளவுகள் குறைந்து நிலவும். ஆயினும் காற்றின் ஈரப்பதம் சற்றே உயர்ந்து காணப்படும். கோழிகளுக்கான தீவனத்தில் பூஞ்சை நச்சுக்களின் அளவு குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்க வேண்டும்.

ஏனெனில் தீவனத்தில் ஈரப்பதம் 11 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் காற்றில் நிலவும் ஈரப்பதத்தால் தீவனத்தில் பூஞ்சை நச்சு உற்பத்தி செய்யும் நுண்ணுயிரினங்களின் தாக்கமும், பெருக்கமும் அதிகமாக காணப்படும். எனவே தீவனத்தை ஈரப்பதம் 11 சதவீதத்திற்கு குறைவாக இருக்கும் வகையில் தயார் செய்ய வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் கலெக்டர் சங்கர் தகவல்**



ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் சங்கர் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

கல்வி உதவித்தொகை

முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் கல்வி உதவித்தொகை, உறுப்பினர் மற்றும் உறுப்பினரை சார்ந்தோருக்கான திருமண உதவித்தொகையும் அடங்கும். இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து நிவாரண உதவித்தொகை, காசநோய், புற்றுநோய், நரம்பியல் குறைபாடு, இதய நோய் குறைபாடு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1000 வழங்கப்படுகிறது.

விண்ணப்பிக்கலாம்

இந்த திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பயன்கள் அனைத்தும் உறுப்பினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை சென்றடைய உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்த விவசாயிகள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

எனவே தகுதி உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூக பாதுகாப்புத் திட்ட தனி தாசில்தாரிடம் விண்ணப்பித்து உதவித்தொகை பெற்று பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## மழையால் ஏற்படும் பாதிப்பை தடுக்க கோத்தகிரி–மேட்டுப்பாளையம் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்டும் பணி



கோத்தகிரி,

மழையால் ஏற்படும் பாதிப்பை தடுக்க கோத்தகிரி– மேட்டுப்பாளையம் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இந்த மழைக்காலத்தில் கடந்த சாலங்களில் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மேலும் கன மழை பெய்தால் நிலச்சரிவு ஏற்படும் அபாயமும் உள்ளது.

மழை காரணமாக ஏற்படும் சேதங்களை தவிர்க்கும் விதமாக மாவட்ட கலெக்டர் கடந்த சில தினங்களுக்கு அனைத்து அதிகாரிகளை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். அப்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது குறித்து அறிவுரைகளை வழங்கினார்.

தடுப்புச்சுவர்கள் கட்டும்பணி

ஊட்டியில் இருந்து மேட்டுப்பாளையத்துக்கு செல்லும் சாலைக்கு மாற்றுப்பாதையாக கோத்தகிரி சாலை உள்ளது. இந்த சாலையில் மழையால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதையொட்டி சாலையில் மண்சரிவு ஏற்படும் இடங்களில் தடுப்புச்சுவர்கள் கட்டும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்த பாதையில் அரவேனு மற்றும் சேட்டுப்பேட்டை பகுதிகளில் தடுப்புச்சுவர்கள் இல்லாததால் அங்கும் தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளன.

மேலும் சேதமடைந்த இடங்களிலும் சீரமைப்பு பணிகள் நடைபெற்றுள்ளன.

ஏற்பாடுகள்

குன்னூர்– மேட்டுப்பாளையம் சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டாலும் கோத்தகிரி வழியாக மேட்டுப்பாளையத்துக்கு வாகனங்கள் செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கூடலூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு பயிரிட ஆர்வம் காட்டும் விவசாயிகள்**



கூடலூர்,

கூடலூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

பச்சை தேயிலை விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக பச்சை தேயிலை விவசாயம் காணப்படுகிறது. ஆனால் பச்சை தேயிலை விலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு கிலோவுக்கு ரூ.2 மானியம் வழங்கி வருகிறது.

பணப்பயிர்களாக உள்ள குறுமிளகு, இஞ்சி, காபி, ஏலக்காய், கிராம்பு மற்றும் தேயிலை பயிர்களுக்கு பராமரிப்பு பணிகள் அதிகம் மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அதே நேரத்தில் தோட்ட தொழிலாளர்கள் கூலி, உரம் விலை உயர்வு உள்ளிட்ட செலவினங்களை கணக்கீட்டால் அதற்கு ஏற்ப விவசாயிகளுக்கு விலை கிடைப்பது இல்லை.

இதையொட்டி தேயிலை பயிருக்கு மாற்றாக கூடலூர் பகுதி விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு, நேந்திர வாழை, பாகற்காய், பீன்ஸ் உள்ளிட்ட பயிர்களை விளைவிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

<u>மரவள்ளிக்கிழங்கு</u>

கூடலூர் புத்தூர்வயல், ஏழுமரம், தோட்டமூலா, தொரப்பள்ளி, பாடந்தொரை மற்றும் பந்தலூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். 6 மாதம் முதல் 1 ஆண்டு வரை விளையக்கூடிய மரவள்ளிக்கிழங்கு செடிகள், குறைந்த அளவு பராமரிப்பில் வளரக்கூடியது. மரவள்ளிக்கிழங்கு கிலோவுக்கு ரூ.18 வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்கிறது.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

தேயிலை விலை சரிந்துள்ளதால் காய்கறி, வாழை, மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவதில் கவனம் செலுத்தி வருகிறோம். மரவள்ளிக்கிழங்கு செடிகளை நட்டு 2 முறை சாண உரமிட்டால் போதும். இயற்கையாக நிலத்தில் உள்ள ஈரப்பதத்தில் மரவள்ளிக்கிழங்கு செடிகள் நன்கு வளர்கின்றன. அதிக தண்ணீர் தேவை இல்லை. பராமரிப்பு செலவும் மிக குறைவு.

<u>தேவை அதிகம்</u>

1 ஏக்கருக்கு 700 செடிகள் நடவு செய்யலாம். இதற்காக ரூ.10 ஆயிரம் மட்டுமே பராமரிப்பு செலவு ஆகிறது. ஒரு செடியில் 9 கிலோ வரை கிழங்கு விளைகிறது. ஆனால் தேயிலைக்கு பராமரிப்பு செலவு அதிகம். அதற்கு ஏற்ப கூலி கிடைப்பது இல்லை. மரவள்ளிக்கிழங்கு உள்ளூர் மட்டுமின்றி கேரள மாநிலத்துக்கு அதிகளவு கொண்டு செல்லப்படுகிறது. இதனால் தேவை அதிகமாக உள்ளதால் நிரந்தரமான வருவாய் கிடைக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

### விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி




பெரம்பலூர் மாவட்டம், குன்னம் கிராமத்தில் பெரம்பலூர் தனியார் வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் சார்பில் விவசாயிகளுக்கு காளான் உற்பத்தி, பருத்தி மற்றும் மக்காசோளம் சாகுபடியை அதிகரிக்கும் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கும் முகாம் நடைபெற்றது. முகாமில் கல்லூரி முதல்வர் செல்வராஜ், உதவி பேராசிரியர் வகாப் மற்றும் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் செயல் விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில் வேப்பூர் வட்டார வேளாண்மை அதிகாரி அசோகன் சிறப்புரை ஆற்றினார். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## வரத்து அதிகரிப்பால் அறந்தாங்கி வாரச்சந்தையில் நாட்டுக்கோழி விலை வீழ்ச்சி



அறந்தாங்கி வாரச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் நாட்டுக்கோழி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

நாட்டுக்கோழி விற்பனை

அறந்தாங்கியில் செவ்வாய்கிழமைதோறும் நடைபெறும் வாரச்சந்தையில் காய்கறி, பழங்கள், மாடு, ஆடு, மீன் உள்ளிட்டவைகளுடன் நாட்டுக்கோழியும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. செவ்வாய்கிழமை அதிகாலை முதல் வங்கி அருகே நடைபெறும் நாட்டுக்கோழி விற்பனை செய்யும் இடத்தில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நாட்டுக்கோழிகளை கொண்டு வந்து விற்பனை செய்வது வழக்கம்.

அதேப்போல புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் தங்கள் வீடுகளில் வளர்ப்பதற்காகவும், வீட்டில் சமைத்து சாப்பிடுவதற்காகவும், ஓட்டல் உரிமையாளர்கள் தங்கள் ஓட்டல்களில் சமைத்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காகவும் நாட்டுக்கோழிகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

20 சதவீதம் குறைவு

இந்நிலையில் அடுத்த வாரம் தீபாவளி பண்டிகை என்பதால் நேற்று அறந்தாங்கி வாரச்சந்தைக்கு வழக்கத்தைவிட பல மடங்கு நாட்டுக்கோழிகள் விற்பனைக்கு வந்தன. மேலும் வீடுகளில் நாட்டுக்கோழிகளை வளர்ப்பவர்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் நாட்டுக்கோழிகளை விற்பனை செய்துவிட்டு தீபாவளிக்கு தேவையான மற்ற பொருட்களை வாங்குவதற்காக தாங்கள் வளர்த்துவந்த நாட்டுக்கோழிகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

அடுத்த வாரம் தீபாவளி வருவதால், பொதுமக்கள் பெரும்பாலானவர்கள் தீபாவளிக்கு தங்களுக்கு உள்ள மற்ற செலவினங்களை கணக்கில் கொண்டு, இந்த வாரம் இறைச்சிக்காக நாட்டுக்கோழிகளை வாங்க ஆர்வம் காட்டவில்லை. மேலும் வழக்கத்தைவிட பல மடங்கு விற்பனைக்காக நாட்டுக்கோழிகள் வந்ததால், நாட்டுக்கோழிகளின் விலை கடந்த வாரத்தை விட கிலோ ஒன்றிற்கு சுமார் 20 சதவீதத்திற்கு

மேல் குறைந்தது.

வியாபாரிகள் ஏமாற்றம்

குறிப்பாக கடந்த செவ்வாய்க்கிழமை 2 கிலோ கொண்ட ஒரு சேவல் ரூ.500-க்கு விற்பனையானது. ஆனால் இந்த வாரம் அதன் விலை ரூ.400 ஆக குறைந்தது. விலை குறைந்ததால், நாட்டுக்கோழிகளை விற்பனை செய்ய வந்த வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். இருப்பினும் அடுத்த வாரம் திங்கட்கிழமை நடைபெறும் தீபாவளி சிறப்பு வாரச்சந்தையில் நாட்டுக்கோழியின் விலை பல மடங்கு உயரும் வாய்ப்பு உள்ளது.இதுதவிர கடந்த சில நாட்களாக ஒரு கிலோ பிராய்லர் கோழி இறைச்சி ரூ.100-க்கு விற்பனை ஆனது. ஆனால் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக பிராய்லர் கோழி இறைச்சி கிலோ ஒன்றிற்கு 15 சதவீதம் குறைந்த அதாவதுரூ.85 க்கு விற்பனை ஆனது.

## வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கக்கோரி விவசாயிகள் கலெக்டரிடம் மனு




வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கக் கோரி விவசாயிகள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

விவசாயிகள் மனு

சிவகங்கை மாவட்ட பூர்வீக வைகை பாசன விவசாயிகள் சங்க தலைவர் கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் ஆதிமூலம், உலக நாதன், சாமிராஜா, முத்துச்சாமி, கனநாதன், செல்வம் ஆகியோர் மாவட்ட கலெக்டர் மலர்விழியிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:-

சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் வைகை தண்ணீரின் மூலம் பாசன வசதி பெற்று வருகின்றன. ராமநாதபுரம் மாவட்டத்தில் 67 ஆயிரம் ஏக்கரும், சிவகங்கை மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரும், மதுரை மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கரும் வைகை தண்ணீர் மூலம் பாசன வசதி பெற்று வருகின்றன. வழக்கமாக சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை மாவட்ட கணக்கில் 1,500 கன அடி தண்ணீர் இருந்தாலே விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால் தற்போது வைகை அணையில் 2 ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீர் உள்ளது.

வழக்கமாக அக்டோபர் மாத கடைசியில் சாகுபடிக்காக வைகையில் இருந்து தண்ணீரை திறந்து விடுவார்கள். ஆனால் இந்த ஆண்டு இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை. சிவகங்கை மாவட்டத்தில் 87 வைகை பாசன கண்மாய்கள் உள்ளன. தற்போது பெரியாற்று பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து வருகின்றனர். மேலும் வைகை ஆற்றில் வரும் மழைநீரும் நிலையூர் கால்வாயில் முழுமையாக சென்றுவிடுகிறது.

நடவடிக்கை தேவை

பொதுவாக இதுபோல் வரும்போது 4-ல் 3 பங்கு தண்ணீர் சிவகங்கை, ராமநாதபுரத்திற்கும், ஒரு பங்கு தண்ணீர் நிலையூர் பகுதிக்கும் செல்ல வேண்டும். அவ்வாறு வந்தால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்று பகுதிகளில் தான் பெரும்பாலான குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எனவே சிவகங்கை, ராமநாதபுரம்

மாவட்டத்திற்கு விவசாயத்திற்கும், குடிநீர் பெறவும் வைகை அணையை திறக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அந்த மனுவில் தெரிவித்து இருந்தனர்.இந்த மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் மலர்விழி பொதுப்பணித்துறை செயற்பொறியாளரை நேரில் அழைத்து சிவகங்கை மாவட்டத்திற்கு வைகை தண்ணீர் திறக்க தேவையான நடவடிக்கை எடுக்கும் படி தெரிவித்தார்.

## மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் திறப்பு



மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்திற்கு கடந்த ஆகஸ்டு மாதம் 20–ந் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. முன்னதாக வினாடிக்கு 500 கன அடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர் பாசனத்தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்தோ, குறைத்தோ திறந்து விடப்பட்டிருந்தது. இந்த நிலையில் கால்வாய் பாசனப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் 30–ந் தேதி தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. தற்போது கடந்த 2 நாட்களாக மழை நின்றதால் கால்வாய் பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் தேவை ஏற்பட்டது.

இதன்காரணமாக நேற்று காலை முதல் மீண்டும் வினாடிக்கு 400 கனஅடி வீதம் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது

## ஊத்துக்கோட்டையில் பலத்த மழை



ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் நேற்று மதியம் 1 மணி முதல் 3 மணி வரை பலத்த மழை பெய்தது. கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை, ஆதம்பாக்கத்தில் நேற்று லேசான மழை பெய்தது. பெரியபாளையம், ஆரணி, கொசவன்பேட்டை, சிறுவாபுரி போன்ற இடங்களில் நேற்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை பலத்த மழை பெய்தது. திருவள்ளூர், மணவாளநகர், ஈக்காடு, அரண்வாயல், திருமழிசை, வெள்ளவேடு, திருப்பாச்சூர், கடம்பத்தூர், பேரம்பாக்கம், புதுமாவிலங்கை, அகரம், மப்பேடு, கீழச்சேரி, திருவாலங்காடு, களாம்பாக்கம், சின்னமண்டலி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்ததது. இதனால் சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

காஞ்சீபுரம் மாவட்டம் காஞ்சீபுரம், வண்டலூர், ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், காட்டாங்கொளத்தூர், பொத்தேரி போன்ற இடங்களில் நேற்று லேசான மழை பெய்தது.

## அருப்புக்கோட்டை பகுதியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? நகர்மன்ற கூட்டத்தில் விவாதம்




முதல்-அமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்த மழைநீர் சேகரிப்பு திட்டம் அருப்புக்கோட்டை பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என நகர்மன்ற கூட்டத்தில் கவுன்சிலர்கள் கேள்வி எழுப்பினர்.

நகர்மன்ற கூட்டம்

அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்டம் நகர்மன்ற தலைவர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் முத்து வெங்கடேசன், மேலாளர் செய்யது உசேன், அலுவலர்கள், கவுன்சிலர்கள் உள்பட கலந்து கொண்டனர். கூட்டத்தில் கவுன்சிலர்கள் இடையே நடந்த விவாதம் வருமாறு:-

கவுன்சிலர் மதிவாணன்: 11-வார்டில் உள்ள குப்பைகளை, டெலிபோன் ரோட்டில் வந்துதான் கொட்டுகிறார்கள். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் பொதுமக்கள், மாணவ-மாணவியர் அவதிப்படுகின்றனர். நகர்மன்ற தலைவர்: இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கவுன்சிலர் சிக்கந்தர்: எம்.எஸ்.நகர், கலைஞர்நகர் ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்கு அமைக்க கோரியும், அஜீஸ் நகர், பூங்கா பகுதியில்

குப்பை தொட்டிகள் வைக்கவும் பல முறை கவுன்சில் கூட்டத்தில் கூறி விட்டேன். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

நகர்மன்ற தலைவர்: விரைவில் புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும். பழுதடைந்த குப்பை தொட்டிகள் சீர்செய்து வந்தவுடன் அங்கு அப்பணி மேற்கொள்ளப்படும்.

கவுன்சிலர் மணிவண்ணன்: கவுன்சிலர்களுக்கும், நகராட்சிக்கும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. கவுன்சிலர்கள் கூறும் குறைகளை அதிகாரிகள் நிவர்த்தி செய்து தருவதில்லை.

நகர்மன்ற தலைவர்: கவுன்சிலர்கள் கூறும் குறைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

மழைநீர் சேகரிப்பு திட்டம்

கவுன்சிலர் அண்ணாமலை: நகரில் 15 நாட்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் வருகிறது. நிலத்தடி நீரும் குறைந்து விட்டது. நீர் நிலைகளில் ஆகாயத்தாமரை வளர்ந்து கிடக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படுமா?. அருப்புக்கோட்டை பகுதியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் நடைமுறையில் உள்ளதா? அதை செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர் மன்ற தலைவர்: அதற்கான நடவடிக்கையில் நாங்களும், அதிகாரிகளும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறோம்.

கவுன்சிலர் முருகேசன்: நகராட்சி இடங்கள் தனியார் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அதற்கான பட்டா மாறுதல் செய்ய முயற்சி

மேற்கொள்ளப்படுகிறது. நகராட்சிக்கு சொந்தமான இடங்களை மீட்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

நகர்மன்ற தலைவர்: நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. அரசு வழக்கறிஞர் மூலம் அதற்கான பணிகளை செய்து வருகிறோம்.

கவுன்சிலர் பிரேமா: நீதிமன்ற வழக்கு விசாரணையில் ஆஜராகும் வழக்கறிஞர் உரிய ஆவணங்களை சமர்பிக்காததால், அதற்கான விசாரணையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கே சாதகமாக உள்ளது. அவர்களுக்கு வழங்கிய தீர்ப்பும் காலாவாதியாகி விட்டது. நகராட்சி மூலம் ஆக்கிரமிப்பு இடங்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கவுன்சிலர் மணிவண்ணன்: நகராட்சி இடங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது போலீஸ் நிலையத்தில் புகார் செய்யுங்கள்.

கவுன்சிலர் குணசேகரன்: முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்த மழைநீர் சேகரிப்பு திட்டம் நடைமுறைபடுத்தப்படுகிறதா? பிறமடை ஓடையில் செடிகள் வளர்ந்து கிடப்பதால், அப்பகுதியில் கொசுக்கள் அதிகமாக பரவி வருகின்றன. ஆணையாளர் : பருவமழை தொடங்கி விட்டதால் பொதுமக்களிடையே மழை நீர் சேகரிப்பு குறித்து விழிப்பணர்வு செய்து வருகிறோம். மேலும் புதிய வீடு கட்டுவோர் கண்டிப்பாக மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு விவாதம் நடந்தது.